# 8. இறைக்கொள்கையும் வரவுசெலவுத் திட்ட தொழிற்பாடுகளும்

## 8.1 பொதுநோக்கும் கொள்கையும் உபாயமும்

வெளிநாட்டு இயல் ஆற்றலுடன் கூடிய பணவீக்கமற்ற பொருளாதார வளர்ச்சிக்கு வழி அமைத்த தனியார் துறைக்கு அடித்தளம் இடும் நிலைத்து நிற்கக் கூடிய வரவு செலவுத்திட்டத்தின் குறையினைக் குறைக்கும் விதத்திலான நடுத்தரக் கால இறைத்திட்ட வரைச் சட்டத்தினை ஏற்படுத்துவது இறை உத்தியின் குறிக்கோளாகும். இறைச் சீரமைப்பு நிகழ்ச்சித்திட்டமானது விரிவாக்கப்படுகின்ற வரித்தளம், மேம்பட்டு வரும் வரி நிருவாக இணக்கப்பாடும், இறை ஊக்குவிப்புக்களை ஒழுங்கு முறைப்படுத்தல், வரி அமைப்பில் உள்ள ஓட்டைகளை அடைத்துவிடல், அரச தொழில் முயற்சிகளை சீரமைத்தல், இறக்குமதி தீர்வை அமைப்பினை இலகுபடுத்தி மற்றும் தீர்வைப்பாதுகாப்பினைக் குறைத்தல் என்பன வற்றை உள்ளடக்கியிருந்தது. 1996 இன் வரவு செலவுத்திட்டம் இறைக்கொள்கை சீரமைப்பில் மேலும் முன்னேற்றத்தினையும் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை மொ.உ. உற்பத்தியின் 6.6 சதவீதத்திற்கு (கொடைகளுக்கு முன் 7.8 சதவீதம்) குறைப்பதற்கும் எதிர்பார்க்கிறது. பற்றாக்குறையை வங்கியல்லா மூலங்களின் ஊடாக நிதியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 1996 இல் இறைக் கொள்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. பெறப்பட்ட மொத்த இறைப் பற்றாக்குறை மொ.உ. உற்பத்தியின் 7.8 சதவீதமாக அமைந்து (கொடைகளுக்கு முன் 8.9 சதவீதம்) 1995 இலும் பார்க்க குறைவாக இருந்த போதிலும் 1996 இன் வரவு செலவுத்திட்ட எதிர்பார்ப்புக்களிலும் பார்க்க மிகக் கீழே வீழ்ச்சியடைந்தமைக்கு பாதுகாப்பு செலவினத்தில் ஏற்பட்ட பெருமளவு உயர்வு, பன்னாட்டு கோதுமை விலைகளில் ஏற்பட்ட கூடிய அதிகரிப்பு, கோதுமை மா உதவு தொகைச் செலவினை கூட்டியமை, தனியார் மயமாக்கல் பெறுகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் நீண்டகால வளர்ச்சி மற்றும் அரச அரசிறையின் மீதான மின்வெட்டின் பாதகமான தாக்கம் என்பன காரணங்களாகும். உள்நாட்டுத்துறையில் காணப்பட்ட மூலவள கட்டுப்பாடும் செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் குறிப்பாக வலு, வீதி, தொலைத்தொடர்பூட்டல் மற்றும் நீர் வழங்கல், துறைகளில் காணப்பட்ட தாமதங்களும், வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்கான வெளிநாட்டு மூலவளங்களின் உட்பாய்ச்சலை குறைத்துவிட்டன. யென்னுக்கு எதிராக ரூபா 7 சதவீதத்தினால் உயர்வடைந்தமையும் யென் பணஅனுப்பல்களின் உள்நாட்டு நாணயப் பெறுமதியை குறைத்துவிட்டன. இதனால் பற்றாக்குறையில் 82 சதவீதம் வங்கி நிதியிடல் மூலமான 21 சதவீதம் உட்பட உள்நாட்டு கடன்பாடுகள் ஊடாகவே நிதியிடப்பட்டது. அதே வேளை 1997 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் அவசர நிதி திரட்சி ஒனறுக்கான தேவையை மீணடும் வலியுறுத்தியதுடன் 1997 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை மொ.உ. உற்பத்தியில் 6.1 சதவீதத்திற்கு (கொடைகளுக்கும் முன் மொ.உ.உ வின் 7.3 சதவீதம்) இலக்கிட்டதுடன் 1999 ஆம் ஆண்டுக்கான நடுத்தரகால வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை மொ.உ.உ உற்பத்தியின் 3.5 சதவீதத்துக்கு (கொடை களுக்கு முன் மொ.உ.உ இல் 4.5 சதவீதம்) இலக்கிட்டுக் கொண்டுள்ளது.

வரிக்கொள்கைச் சீரமைப்புக்கள், திரிபுகளைக் குறைத்தல், கொடுக்கும் ஆற்றல் தத்துவத்திற்கிணங்க பிரயோகிக்கப்படும் குறைவான வரிவீதங்களுடன் விரிவாக்கப்பட்ட வரித்தளம், வரி இறுப்புக்களையும் முன்னுரிமைகளையும் ஆகக் குறைத்தல் என்பனவற்றின் மூலமாக அரசிறைச் செழிப்பினை மேம்படுத்துவதன் மீதே மிகுந்த கவனத்தைக் கொண்டிருந்தன. 1996 இல் வருமான வரிக்கான அடிமட்டம் உயர்த்தப்பட்டது. வரிப் பிரிவுகள் விரிவாக்கப்பட்டதுடன் இடை நிலை வரி வீதங்களும் குறைக்கப்பட்டன. மேலும் திரிபுகளை அகற்றி வரி முறையைக் கூடிய அளவுக்கு மிகத் தெளிவாக்குவதற்காக தொழில் நிலைக் கொடுகடன், தகைமை பேணும் கொடுப்பனவுகள், கணக்கிடும் மதிப்பிடத்தக்க வருமானம், முடிவுறும் நன்மைகள் வருமான வரி மீதான மேலதிக கட்டணங்கள் ஆகிய துறைகளின் வருமான வரி விதிப்பு நவீனமாக்கப்பட்டது.

மூலதனச் சந்தைக்கு ஊக்கமூட்டுவதற்காக பல வரி வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை, மூலதனச் சந்தையில் பரந்த அளவிற்கு பங்கேற்பதற்காக கூறு நம்பிக்கைகளுக்கு மேலும் இரு ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட வரி விடுப்பின் நீடிப்பு, பங்குப்பரிவர்த்தனை ஊடாக நிதியிடப்பட்ட பொதுக்கம்பனிகளின் முறிகள் மற்றும் ஏனைய படுகடன் பிணைகள் மீதான முத்திரைத்தீர்வை அகற்றப்பட்டமை, கொடுக்கல் வாங்கல் செலவினைக் குறைக்கும் பொருட்டு பங்குத் தரகர் கட்டணம் மற்றும் முதலீட்டு கம்பனிகளினதும் கூறு நம்பிக்கைகளினதும், பங்கு கொடுக்கல் வாங்கல்களுக்கு மொத்த விற்பனை வரியில் இருந்தும் விலக்களித்தல், என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினாலும், முதலீட்டுச் சபையினாலும் வழங்கப்பட்ட பல் வேறு வரி ஊக்குவிப்புத்திட்டங்களை இணங்குவிப்பதற்காக சீரமைப்புக்கள் அறிவிக்கப்பட்டன. மற்றும் பணிகள் துறையில் உள்ள கம்பனிகளுக்கு வரி விடுப்புக்கள், குறிப்பிட்ட இறக்குமதி செயற் திட்டங்கள் மீது தீர்வையற்ற இறக்குமதி வசதிகள் மற்றும் மொத்த விற்பனை வரி விலக்களிப்புகள் என்பன வழங்கப்பட்டன. தேசிய பாதுகாப்புத் தீர்வை என மீள பெயரிடப்பட்ட பாதுகாப்புத் தீர்வை, முன்னேற்றகரமான தொழில் நுட்பங்களை பயன்படுதுவதனை ஊக்குவிக்கும் முகமாக மூலதனப் பொருட்களின் இறக்குமதிகளை பொறுத்தவரை அதன் ஆரம்ப மட்டமான 4.5 சதவீதத்தில் இருந்து 0.5 சதவீதத்துக்கு குறைக்கப் பட்டது.

இறக்குமதி தீர்வைகளை 3 பிரிவு வரி அமைப்பான 10,20 மற்றும் 35 சதவீதங்களுக்கு கொண்டுவருவதில் எழுந்த முரண்பாடுகளை சரி செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட தீர்வை மற்றும் சுங்கச் சீரமைப்புக்கள் பல் வேறு துறைகளுக்கும் சீரான தன்மையை உறுதிப் படுத்தின. சுற்றாடலைப் பாதுகாப்பதுடன் அறிவு புகட்டலை மேம்படுத்துவதற்காக வேளாண்மை மற்றும் மீன்பிடித்துறையில் உற்பத்தியாற்றலை உயர்த்துவதற்காக சலுகைகள் வழங்கப் பட்டன. வேளாண்மை கருவிகள் மற்றும் சாதனங்கள் மீன்பிடி வலைகள் மூலப்பொருட்கள், மற்றும் சஞ்சிகைகள் போன்ற பொருட்களுக்கான இறக்குமதித் தீர்வைகள் மூன்று வரிப்பிரிவமைப் புக்குள் குறைக்கப்பட்டன. குடிவகை, சிகரெட், பெற்றோல், டீசல் மற்றும் ஒரு சில ஆடம்பர நுகர்வுப்பொருட்கள் போன்ற கலால் வரி விதிக்கத் தக்க பொருட்களுக்கான கலால் வரி விதிப்பை கட்டுப்படுத்துகின்றதன் மூலமாக தீர்வை வரிகள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டன. தீங்கு பயக்கக் கூடிய வெறியங்களின் நுகர்வினை ஊக்கம் குன்றச் செய்து ஏற்றுமதிக்கான உள்ளார்ந்த வளத்தினைக் கொண்ட இக் கைத்தொழிலில் முதலீட்டினை மேம்படுத்துவதற்காக பியர் மீதான கலால் வரி குறிப்பிடத்தக்க அளவிற்கு குறைக்கப் பட்டது.

அரசிறையை உயர்த்தும் ஒரு வழிமுறை யாக பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட நழுவிச் செல்லும் அளவு முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் முத்திரைத் தீர்வைகள் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டன. நிருவாகச் செலவினை ஈடுசெய்யும் விதத்தில் கடவுச்சீட்டு மற்றும் விசாக்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. நாட்டைக் காக்கும் உதவு தொகை என்ற பெயர் கொண்ட புதிய வரி ஒன்று மாதாந்தம் ரூ. 15,000 க்கு மேற்பட்ட தனியார் ஊதியத்தின் மீது விதிக்கப்பட்டது. இலங்கை ரெலிக்கொம்மின் வசதிகளை பயன்படுத்துபவர்கள் மீது மொத்த விற்பனை வரியை சுமத்தும் நோக்குடன் அதன்மீது தீர்வை ஒன்று விதிக்கப்பட்டது.

செலவினப்பக்கத்தில், முன்னைய ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட சம்பளத் திருத்தங்களின் போது கூலி அதிகரிப்புக்களை பெறாத அரச ஊழியர்களுக்கு இடைக்கால படி ஒன்று வழங்கப் பட்டது. மேலும் அரசின் கூலி அல்லா தொழிற் பாட்டுச் செலவினம் மற்றும் ரூபாவினால் நிதியிடப் பட்ட குறைந்த முன்னுரிமை கொண்ட மூலதனச் செயற்திட்டம் ஆகிய இரண்டின் மீதும் 10 சதவீத வெட்டு விதிக்கப்பட்டது. பொறுப்புக்களை ஒழுங்கு முறைப்படுத்துதல் மற்றும் இறை ஒழுங்குகளை வலுப்படுத்தல், நிதியியல் கட்டுப் பாடுகள் மற்றும் கணக்கிடல் என்பனவற்றை அடையும் குறிக்கோளுடன், வரவு செலவுத் திட்டத்துக்கு புறம்பாக முன்னைய ஆண்டுகளில் அரசினால் நெறிப்படுத்தப்பட்ட கொடுகடன்கள் வடிவில் செய்யப்பட்ட கடப்பாடுகளின் பெயரில் தற்காலிகமானதொரு வழிமுறையாக இரு அரச வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் நீண்ட கால முறிகளை வழங்கியது.

சருவதேச கோதுமை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, பாதுகாப்பு செலவினத்தின் உயர்வு, மற்றும் மின்வெட்டினைத்தொடர்ந்து அரசிறையில் ஏற்படக்கூடிய சாத்தியமான வீழ்ச்சி போன்ற எதிர்பாராத நிகழ்வுகளின் தோற்றப் பாட்டினால் இறை நிலைமையின் மோசமான தன்மையை கட்டுப்படுத்தும் பொருட்டு அரசு பல புதிய அரசிறை முறைகளை நடைமுறைப்படுத்தியது. இதன் படி, சிகரெட்டுக்கள், மற்றும் வெறிக் குடி வகை மீதான கலால் வரி உயர்த்தப்பட்டதுடன் முன்னுரிமை அல்லா செலவினங்கள் வெட்டப் பட்டன. 1996 இல் கோதுமை மாவின் நிருவாக விலையினை குறிப்பிடத்தக்க அளவில் உயர்த்துவதற்கான துணிகர தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டதுடன் இது கோதுமைமாவின் விலையை 42 சதவீதத்தினால் உயர்த்தியது. கோதுமை மாவின் இச் சரியான விலைச் சீராக்கம் பெரும் திரிபுகளை பெரும்பாலும் ஒழித்துவிட்ட அதே வேளையில் கோதுமை மாவின் நெகிழ்ச்சித் தன்மை கொண்ட கட்டற்ற சந்தை விலையை உறுதிப்படுத்துகின்ற பொறிமுறை ஒன்று இருக்க வேண்டியதுடன் இதன் மூலம் எதிர்காலத்தில் உதவு தொகை மூலம் ஒன்று மீண்டும் தோன்றுவதற்கான சாத்தியத்தை முழுமையாக தவிர்த்துவிடும்.

உள்நாட்டு நிதியத்திற்கான தேவை காணப் பட்ட போதும் கடுமையான இறை ஒழுங்குகளை விதிக்கும் பொருட்டு அரசு, திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற மட்டத்தின் மீதான ரூ. 1,250,000 உச்ச எல்லையை உயர்த்தவில்லை.

## 8.2 வரவு செலவுத்திட்ட வெளிப்பாடு

இவ் ஆண்டில் சரியான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக திரண்ட இறைப் பற்றாக்குறை மொ. உ. உற்பத்தியின் 8.9 சதவீதத்தில் கட்டுப்படுத்தப்பட்டதுடன், இதன் காரணமாக 1996 ஆம் ஆண்டில் மூல வரவு செலவுத்திட்டத்தின் எதிர்ப்பார்ப்புக்கள் மொ.உ. உற்பத்தியின் 1.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

மொத்த அரசிறைச் சேகரிப்புக்கள் 1995 இன் மொ.உ.உற்பத்தியின் 20.4 சதவீதத்தில் இருந்து 1996 இன் மொ.உ.உற்பத்தியின் 19.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு வரி

**வரைபடம் 8.1**

**இறைக் குறிக்காட்டிகள்**




விதிக்கத்தக்க இறக்குமதிகள் சார்பு ரீதியில் தாழ்ந்த மட்டத்தில் இருந்தமை, பல்வேறுபட்ட வரி நிவாரண வழி முறைகள் மற்றும் விலக்களிப்புக்கள் வழங்கப்பட்டமையின் விளைவாக இறக்குமதித் தீர்வையின் சராசரி வீதம் வீழ்ச்சியடைந்தமை மற்றும் வரி அல்லா அரசிறைச் சேகரிப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவே காரணமாக இருந்தன.

கலால் வரிகளில் மேல்நோக்கிய திருத்தம் போன்ற புதிய வழிமுறைகளின் தாக்கம் இவ்வாண்டில் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட குறிப்பிடபட்ட வீழ்ச்சியினால் ஓரளவுக்கு எதிரீடு செய்யப்பட்டது. பாதுகாப்புச் செலவினம், கோதுமைமா உதவுதொகை, அகதிகள் தொடர்பான செலவினம், மற்றும் உள்நாட்டு படுகடன் மீதான வட்டிச் செலவு என்பனவற்றில் அதிகரிப்புக்கள் காணப்பட்டபோதும் வீண் விரயமிக்க செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட வழி முறைகள் மீண்டெழும் செலவினத்தை முன்னைய ஆண்டில் 23.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ. உ. உற்பத்தியின் ஏறத்தாழ 22.2 சதவீதத்தில் கட்டுப்படுத்தக்கூடியவனவாக இருந்தன. வரவு செலவுத்திட்டத்தின் நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறை மொ.உ. உற்பத்தியின் 3.2 சதவீதமாக இருந்தது.

1996 வரவு செலவுத்திட்டத்தில் மொ.உ. உற்பத்தியின் 7.5 சதவீதமாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்ட அரச மூதலீடு மொ.உ. உற்பத்தியின் 6.3 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்து முக்கியமான தொலைத்தொடர்பூட்டல் மற்றும்

வலுத்துறைகளில் வெளிநாட்டு மூலவளங்கள் வீழ்ச்சியடைந்தமையை பிரதிபலித்தன. மொ.உ. உற்பத்தியில் 0.6 சதவீதம் கொண்ட உட்பாய்ச்சலைக் காட்டுமென எதிர்பார்க்கப்பட்ட தேறிய கடன் வழங்கல் அதற்கு நேர்மாறாக மொ.உ.உற்பத்தியில் 0.5 சதவீத வெளிப் பாய்ச்சலைக் கொண்டிருந்தமைக்கு தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம் மெதுவான தொழிற் பாட்டினைக் கொண்டிருந்தமையே காரண மாகும். இவை, அரச முதலீட்டில் ஏற்பட்ட குறைப்பின் மூலமே வரவு செலவுத்திட்ட குறையை கட்டுப்படுத்த ஓரளவுக்கு அடையப்பட்டமையை எடுதுக்காட்டின. நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிலையைக் கருத்திற் கொள்கையில் இது ஒரு விரும்பத்தக்க பண்பாக இருக்காது எனலாம். இவ் அரச முதலீடுகளில் பெரும்பான் மையானவை பொருளாதாரத்தின் உட்கட்ட மைப்பு அபிவிருத்தி மற்றும் பேணலுடன் தொடர்புடையதாக இருப்பதனால் குறைந்த மட்ட அரச முதலீடுகள் நாட்டின், நடுத்தர, நீண்ட கால அபிவிருத்தி முயற்சிகளை இடருக் குள்ளாக்கும்.

உயர்ந்த அளவு அரச படுகடன் மீதான வட்டிச் செலவு அரச துறைச் சம்பளங்கள் மற்றும் உயர்ந்து செல்லும் பாதுகாப்பு செலவினத் திற்குப் புறம்பாக குடும்ப அலகுகளுக்கான மாற்றல்கள் என்பனவற்றில் ஏற்பட்ட விரைவான அதிகரிப்பின் காரணமாக பெருமளவு இறைச் சுமை தோன்றியமையை அண்மைக்கால இறைத்துறை அபிவிருத்திகள் எடுத்துக்காட்டின. 1996 திரண்ட வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியில் 8.9 சதவீதமாக இருந்த போதும் ஆரம்ப பற்றாக் குறை மொ.உ. உற்பத்தியின் 2.9 சதவீதமாகவே இருந்த வேளை யில் பாதுகாப்பு நீங்கலான மொ.உ. உற்பத்தியின் 3.2 சதவீதமாக இருந்தது. இது வரவு செலவுத் திட்டத்தில் அமைப்புரீதியான பலவீனங்கள் இருப்பதனை எடுத்துக்காட்டுவதுடன் இவ் வமைப்பு ரீதியான பலவீனங்களை ஒழித்து விடுவதனை நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக இவை சரி செய்யப்பட வேண்டும்.

வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை நிதியிடுவதில் வெளிநாட்டுக் கடன்களின் பயன்பாடு 1995 இன் மொ.உ.உற்பத்தியில் 3.2 சதவீதத்தில் இருந்து 1996 இன் மொ.உ. உற்பத்தியில் 1.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் தேறிய அடிப்படையில், உள்நாட்டு மூலவளங்களின் பயன்பாடு, 1995 இன் மொ.உ. உற்பத்தியின் 5.1 சதவீத்தில் இருந்து 1996 இல் மொ.உ.உற்பத்தியில் 6.4 சதவீதத்துக்கு அதிகரித்தது. 1996 வரவு செலவுத்திட்டத்தில் வங்கி நிதியிடல் மட்டத்தை பூச்சிய மட்டத்திலேயே அரசாங்கம் எதிர்பார்த்த போதும், இறுதியில், வங்கித்தொழிற்துறையிலிருந்தான கடன்பாடுகள். 1996 இல் ரூ. 123,440 இலட்சமாக விளங்கியமை கவனிக்கத்தக்க முக்கியமான ஒரு விடயமாகும். மொ.உ.உற்பத்தியின் விகிதமாகப்பார்க்கையில் வங்கி நிதியிடல் 1995 இன் 1.1 சதவீதத்தில் இருந்து 1996 இல் 1.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. மத்திய வங்கி தற்கால முற்பணங்களின் கீழ் வழங்கப்பட்ட சுழலும் கொடுகடன் வசதிகள் மற்றும் திறந்த சந்தை தொழிற்பாடுகளூடாக திறைசேரி உண்டியலுடைமைகளை அதிகரித்த அளவு வைத்திருந்தமையின் மூலமும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையில் ஒரு பகுதியை நிதியிட்டது. படுகடன் கருவிகளை வழங்குவதன் மூலம் வங்கி அல்லா மூலங்களிலிருந்து அரசாங்கம் மூலவளங்களை திரட்டுவது ரூபா கடன்களுக்கும் திறைசேரி உண்டியல்களுக்குமே பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ரூபாக்கடன் நிகழ்ச்சித்திடங்களின் ஊடாக திரட்டப்பட்ட நிதி ரூ. 467,160 இலட்சமாக விளங்கியதுடன் இதில் 81 சதவீதம் ஊழியர் சேமநிதியத்திலிருந்தும் 12 சதவீதம் தேசிய சேமிப்பு வங்கியிலிருந்தும் பெறப்பட்டது. ரூபா.112,250 இலட்சம் கொண்ட தேறிய புதிய திறைசேரி உண்டியல்களின் வழங்கல்களுடன் 1996 ஒத்தோபரில் வெளிநின்ற திறைசேரி உண்டியல் மட்டம் அதன் ஒப்புதல் அளிக்கப்பட்ட மட்டமான ரூ. 125 பில்லியனாக இருந்தது. திறைசேரி உண்டியல் எல்லை மேல்நோக்கி திருத்தப்படாததனாலும் சந்தையில் உள்ள குறுங்கால திரவத்தை திரட்ட வேறு அரச கடன் கருவிகள் உதவாததனாலும் அரசு கடன்பாடுகளுக்கு அரச நிறுவனங்கள், நியதிச் சபை நிதியங்கள் மற்றும் ஏனைய மூலங்களை நாடியது. 1996 அத்தகைய கடன் பாடுகள் ரூபா. 103,630 இலட்சமாக விளங்கின.

## 8.3 அரசிறையும் கொடைகளும்

1996 இன் மொத்த அரசிறை ரூ. 1,462,790 இலட்சமாக விளங்கி 1995 இல் பதிவு செய்யப்பட்ட 24 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 7 சதவீத வளர்ச்சியை பதிவு செய்தது. வரி அரசிறை ரூபா 1,302,020 இலட்சமாக விளங்கி 10 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்த வேளையில் மொத்த அரசிறையில் வரி அரசிறையின் பங்கு 1995 இன் 87 சதவீதத்தில் இருந்து 1996இல் 89 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொ.உ.உற்பத்தியின் விகிதமாகப் பார்க்கையில் இது இதே காலப்பகுதியில் 17.8 சதவீதத்தில் இருந்து 16.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இறக்குமதிகள் மற்றும் தயாரிக்கப்பட்ட பொருட்கள் மீதான மொத்த விற்பனை வரி குடிவகை மீதான கலால் வரி, மற்றும் கலால் வரி (சிறப்பு ஏற்பாடுகள் சட்டம்) என்பனவற்றிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் குறைவடைந்தமை 1996 இல் வரிச் சேகரிப்பின் மெதுவான வளர்ச்சிக்கு காரணமாகியது. வரியல்லா மூலங்களிலிருந்தான அரசிறைச் சேகரிப்பு 1995 இன் 8 சதவீததுடன் ஒப்பிடுகையில் 1996 இல் 9 சதவீதம் கொண்ட மிக கூடிய அளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இதற்கு வங்கித்தொழில் துறைமீதான சொத்து வருமானம் மற்றும் பங்கிலாபங்களில் ஏற்பட்ட கணிசமான குறைப்பே காரணமாகும். வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கொடைகள் 1996 இல் 6 சதவீதத்தினால் குறைவடைந்தன.

### வரி அரசிறை

1996 இல் குறிப்பிட்ட பண்டங்களுக்கு வழங்கப்பட்ட வரி நிவாரணங்களை பிரதிபலிக்கின்ற விதத்தில் மொத்த விற்பனை வரிகள், பாதுகாப்புத் தீர்வை மற்றும் கலால் வரிகள் என்பனவற்றை உள்ளடக்கிய பொருட்கள் பணிகள் மீதான வரிகளின் பங்கு 1995 இல் மொத்த அரசிறையில் 60 சதவீதத்தில் இருந்து 59 சதவீதத்திற்கு சிறுஅளவால் வீழ்ச்சியடைந்தது. இவ்வரிகளின் இருந்தான அரசிறை முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 25 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9 சதவீதம் கொண்ட மெதுவான வளர்ச்சியை பதிவு செய்தது.

ஏற்றுமதிகள் தவிர்ந்த அனைத்து பொருட்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்பட்ட பாதுகாப்பு தீர்வையில் இருந்தான அரசிறை ரூபா. 164,410 இலட்சத்தினை உருவாக்கி 1995 இன் 49 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1996 இல் 14 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இம் மூலகத்திலிருந்தான அரசிறை 1996 இல் மொத்த வரி அரசிறையில் 13 சதவீதத்துக்கு வகை கூறியது. பாதுகாப்பு தீர்வையின் அதிகரிப்பில் முழு ஆண்டுத் தாக்கம் (1995 யூனில் 3.5 சதவீதத்தில் இருந்து 4.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது) காணப்பட்ட போதும் 1996 இன் அரசிறைச் சேகரிப்பில் இறக்குமதி துறையின் வளர்ச்சியின் மெதுவான போக்குக்கு மூலதன பொருட்களின் இறக்குமதி தொடர்பான பாதுகாப்புத் தீர்வை 4.5 சதவீதத்தில் இருந்து 2.0 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டமை சிகரெட் மீதான வரி அமைப்பில் செய்யப்பட்ட திருத்தம் என்பன இவ்வீழ்ச்சிப்போக்குக்கு முக்கிய பொறுப்பாக இருந்தன.

மொத்த விற்பனை வரிகள் ரூ.376,310 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 13 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 3 சதவீதத்தினால் சிறு அளவு அதிகரித்தன. மேலும் மொத்த வரி வருமானத்தில் மொத்த விற்பனை வரிகளில் இருந்தான அரசிறையின் பங்கு 1995 இன் 31 சதவீதத்தில் இருந்து 1996 இல் 29 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த விற்பனை வரிகளில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சிக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மீதான மொத்த விற்பனை வரிச் சேகரிப்புக்ள் 10 சதவீதத்தினாலும் இறக்குமதி மீதான வரிகள் 2 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். இறக்குமதிகளின் வளர்ச்சியில் ஏற்பட்ட குறைப்பானது இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மொத்த விற்பனை வரி விலக்குகளுடன் சேர்ந்து இறக்குமதி மீதான மொத்த விற்பனை வரி வீழ்ச்சிக்கு காரணமாகியது. 1996 வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வரித்திருத் தத்தின் காரணமாக சிகரெட் மீதான வரித்தளத்தில் ஏற்பட்ட குறைப்பு தயாரிப்புத்துறையின் வெளியீட்டு மட்டத்தினை பாதித்த வலுப் பற்றாக்குறைகள் மற்றும் தொழிலாளர் அமைதியின்மை, மற்றும் டீசல், மண்ணெண்ணெய் போன்ற பெற்றோலிய உற்பத்திகள் மொத்த விற்பனை வரியில் இருந்து

அட்டவணை **8.1**

அரசின் இறைத்தொழிற்பாடுகளின் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1996 தற்காலிகம் | 1997 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும், கொடைகளும் | 94,061 | 106,364 | 118,295 | 145,286 | 157,207 | 154,779 | 180,944 |
| மொத்த அரசிறை | 85,781 | 98,339 | 110,038 | 136,258 | 148,207 | 146,279 | 170,736 |
| வரி அரசிறை | 76,353 | 85,891 | 99,417 | 118,543 | 132,645 | 130,202 | 151,451 |
| வரியல்லா அரசிறை | 9,428 | 12,448 | 10,621 | 17,715 | 15,562 | 16,077 | 19,285 |
| கொடைகள் | 8,280 | 8,025 | 8,257 | 9,028 | 9,000 | 8,500 | 10,208 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் | 116,974 | 140,460 | 167,768 | 200,482 | 208,485 | 214,710 | 235,570 |
| நடைமுறை | 89,639 | 102,288 | 127,084 | 154,159 | 169,781 | 170,629 | 177,930 |
| மூலதன | 24,949 | 33,662 | 30,391 | 41,722 | 43,203 | 40,034 | 47,879 |
| மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கல் | 2,386 | 4,510 | 10,293 | 4,601 | 4,499 | 4,047 | 9,761 |
| நடைமுறைக் கணக்குமிகை/ குறை (-) | -3,858 | -3,949 | -17,046 | -17,901 | -21,574 | -24,351 | -7,194 |
| வரவுசெலவுத்திட்டக்குறை(கொடைகளுக்கு முன்) | -22,913 | -34,096 | -49,473 | -55,196 | -51,278 | -59,932 | -54,626 |
| நிதியிடல் | 22,913 | 34,096 | 49,473 | 55,196 | 51,275 | 59,932 | 54,626 |
| வெளிநாட்டுக் கடன்பாடுகள் | 7,361 | 9,855 | 11,778 | 21,224 | 19,078 | 10,911 | 14,194 |
| உள்நாட்டு கடன்பாடுகள் | 15,552 | 24,241 | 37,696 | 33,972 | 32,201 | 49,020 | 40,432 |
| சந்தைக்கடன்பாடுகள் | 18,757 | 22,229 | 38,362 | 33,424 | 32,201 | 38,657 | 40,432 |
| வங்கியல்லா | 21,079 | 28,308 | 37,205 | 26,359 | 32,201 | 26,313 | 40,432 |
| வங்கி | -2,322 | -6,079 | 1,157 | 7,065 | - | 12,344 | - |
| நாணயமேலாண்மை | -1,901 | -13,657 | 1,764 | 7,662 | - | 9,873 | - |
| வர்த்தகவங்கிகள் | -421 | 7,578 | -607 | -597 | - | 2,471 | - |
| ஏனையகடன்பாடுகள் | -3,205 | 2,012 | -666 | 548 | - | 10,363 | - |
| குறிப்பிட்ட விடயங்கள்: வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை (கொடைகளுக்கு முன்) | -31,193 | -42,121 | -57,730 | -64,224 | -60,278 | -68,432 | -64,834 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமொன்றாக | | | | | | | |
| மொத்த அரசிறையும் கொடைகளும் | 22.1 | 21.3 | 20.4 | 21.8 | 20.3 | 20.1 | 20.3 |
| மொத்தஅரசிறை | 20.2 | 19.7 | 19.0 | 20.4 | 19.1 | 19.0 | 19.1 |
| வரிஅரசிறை | 17.9 | 17.2 | 17.2 | 17.8 | 17.1 | 16.9 | 17.0 |
| வரியல்லா ' அரசிறை | 2.2 | 2.5 | 1.8 | 2.7 | 2.0 | 2.1 | 2.2 |
| கொடைகள் | 1.9 | 1.6 | 1.4 | 1.4 | 1.2 | 1.1 | 1.1 |
| செலவினமும், மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் | 27.5 | 28.1 | 29.0 | 30.0 | 26.9 | 27.9 | 26.4 |
| நடைமுறை | 21.1 | 20.5 | 21.9 | 23.1 | 21.9 | 22.2 | 19.9 |
| மூலதன | 5.9 | 6.7 | 5.2 | 6.2 | 5.6 | 5.2 | 5.4 |
| மீள்கொடுப்பனவு கழித்த கடன்வழங்கல் | 0.6 | 0.9 | 1.8 | 0.7 | -0.6 | 0.5 | 1.1 |
| நடைமுறைக்கணக்குமிகை பற்றாக்குறை (-) | -0.9 | -0.8 | -2.9 | -2.7 | -2.8 | -3.2 | -0.8 |
| வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை (கொடைகளின் பின்) | -5.4 | -6.8 | -8.5 | -8.3 | -6.6 | -7.8 | -6.1 |
| நிதியிடல் | 5.4 | 6.8 | 8.5 | 8.3 | 6.6 | 7.8 | 6.1 |
| வெளிநாட்டுக் கடன்பாடுகள் | 1.7 | 2.0 | 2.0 | 3.2 | 2.5 | 1.4 | 1.6 |
| உள்நாட்டுக் கடன்பாடுகள் | 3.7 | 4.9 | 6.5 | 5.1 | 4.2 | 6.4 | 4.5 |
| சந்தைக்கடன்பாடுகள் | 4.4 | 4.4 | 6.6 | 5.0 | 4.2 | 5.0 | 4.5 |
| வங்கியல்லா | 5.0 | 5.7 | 6.4 | 3.9 | 4.2 | 3.4 | 4.5 |
| வங்கி | -0.5 | -1.2 | 0.2 | 1.1 | - | 1.6 | - |
| நாணய மேலாண்மை | -0.4 | -2.7 | 0.3 | 1.1 | - | 1.3 | - |
| வர்த்தக வங்கி | -0.1 | 1.5 | -0.1 | -0.1 | - | 0.3 | - |
| ஏனைய கடன்பாடுகள் | -0.8 | 0.4 | -0.1 | 0.1 | - | 1.3 | - |
| குறிப்பிட்ட விடயங்கள் வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை (கொடைகளின் முன்) | -7.3 | -8.4 | -10.0 | -9.6 | -7.8 | -8.9 | -7.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

விலக்குப் பெற்றமை என்பன 1996 தயாரிப்புத் துறையிலிருந்தான மொத்த விற்பனைவரிச் சேகரிப்புகள் குறைவடைய முக்கிய காரணங்களாக இருந்தன எனினும் தயாரிப்பு அல்லா நடவடிக்கைகள் மீதான மொத்த வரிகள் முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 10 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 37 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பொன்றைக் காட்டியது. வங்கித்தொழில் மற்றும் நிதிப்பணிகள், தொலைத்தொடர்பூட்டல் பணிகள், துறை முகங்கள், வான் பயணங்கள் மற்றும் காப்புறுதி போன்ற பணிகள் துறை நடவடிக்கைகளின் விரிவான விரிவாக்கம் மொத்த விற்பனை வரிச் சேகரிப்புக்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்களுக்கு உதவின. தனியொரு வரிப்பிரிவுடன் பொருட்கள் பணிகள் வரிமுறைக்கு சுமுகமாக மாற்றப்படுவதற்கு வசதி செய்யும் விதத்தில் மொத்த விற்பனை வரியின் வரிப்பிரிவுகளான 6சதவீதமும், 10 சதவீதமும் 1996 நவம்பரில் முறையே 7 சதவீதத்துக்கும் 11 சதவீதத்துக்கும் முன்னோக்கி திருத்தப்பட்டன.

1996 இல் கலால் வரிகளிலிருந்தான அரசிறை ரூ. 220,670 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 33 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 14 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. இம் மூலத்திலிருந்தான அரசிறையில் ஏற்பட்ட முழு அதிகரிப்பும் சிகரெட் மீதான கலால் வரியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியினால் உருவாக்கப்பட்ட வேளையில் குடிவகை, மற்றும் கலால் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் கீழ் நிரல் இடப்பட்ட பண்டங்கள் மீதான கலால் வரி 1996 இன் அரசிறைச் சேகரிப்பில் குறைப்பினை பதிவு செய்தன. புகையிலை மற்றும் சிகரெட் மீதான கலால் வரி சருவதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிகரெட்டுக்களின் நீளம் மற்றும் நிறையின் அடிப்படையில் தனியொரு அலகு வரிக்கு ஒன்று திரட்டப்பட்டமையும் 1996 யூலையில் சிகரெட்டுக்கள் மீதான கலால் வரி மேல் நோக்கி திருத்தப்பட்டமையும் சிகரெட்டுக்களின் அதிகரித்த விற்பனை அளவுடன் சேர்த்து கலால் வரிச் சேகரிப்புகள் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 11 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவுக்கு அதிகரிப்பதற்கு பொறுப்பாக இருந்தன. மாறாக ரூ. 58,390 இலட்சமாக விளங்கிய குடிவகை மீதான கலால் வரியிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டின் 34 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 7 சதவீத வீழ்ச்சியைக் காட்டின். 1996 யூலையில் குடிவகை மீதான கலால் தீர்வை மேல் நோக்கி திருத்தப்பட்ட போதும் வெறிக்குடி வகையின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி வரிச் சேகரிப்பில் 7 சதவீத வீழ்ச்சியை விளைவித்தது. மேலும் பியர் உற்பத்தி 70 சதவீதத்தினால் விரைவாக அதிகரித்த போதும் கூட அரசிறை இழப்புக்களை ஈடுசெய்யமுடியாமல் போனமைக்கு பியர் மீதான கலால் வரி தொகை வடிவிலான லீற்றர் ஒனறுக்கு ரூ. 33.60 இலிருந்து 1995 நவம்பரில் தொகை வடிவிலான லீற்றர் ஒன்றுக்கு ரூ. 10.00 இற்கு குறைக்கப்பட்டமையே காரணமாகும். கலால் வரியினை இலகுபடுத்தும் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் மூலம் உயர்ந்த உள்ளார்ந்த வளத்தினைக் கொண்ட பண்டங்களின் மீது மட்டும் வரி விதிக்கப் பட்டமையைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையான மற்றைய பண்டங்களின் மீதான வரியினை ஒழித்து விட்டமையின் காரணமாக இவ் வரிவகையி லிருந்தான இறைச் சேகரிப்புக்கள் ரூ. 33,950 இலட்சத்திற்கு 22 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை பெற்றோல், டீசல், போன்ற பெற்றோலிய உற்பத்திகள் மீதான கலால் வரியானது 1996 நவம்பரில் மேல் நோக்கிய விலைத் திருத்தங்களுடன் நிலையான வீத அடிப்படை யிலிருந்து பெறுமான விகித அடிப்படைக்கு மாற்றப் பட்டமையின் மூலம் ஒழுங்குமுறைப்படுத் தப்பட்டது.

1996 இல் இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதி 14 சதவீதத்தினால் அதிகரித்த போதும் இறக்குமதித் தீர்வையிலிருந்தான அரசிறைச் சேகரிப்பு 4 சதவீதத்தினால் மட்டுமே உயர்வடைந்தது. இக் குறைந்த வளர்ச்சிக்கு வேளாண்மைக் கருவிகள், நூல்கள், மரம், மீன்பிடி வலை போன்றவற்றிற்கான தீர்வை வீதங்கள் கீழ் நோக்கி திருத்தப்பட்டமையும் அரிசி, சீனி, உருளைக்கிழங்கு, வெங்காயம், செத்தல் மிளகாய் மற்றும் உந்து உதிரிப்பாகங்கள் போன்ற சில இறக்குமதிகளுக்கு வழங்கப்பட்ட முழு அல்லது ஒரளவான தீர்வை தளர்த்தல்களும் காரணமாகலாம். இது மொத்த இறக்குமதிகளில் தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகளின் பங்கினை 1995 இன் 44 சதவீதத்தில் இருந்து 42 சதவீதத்திற்கு குறைத்தது. இதன்படி சேகரிக்கப்பட்ட மொத்த

தீர்வைகளை மொத்த இறக்குமதிகளினால் வகுப்பதன் மூலம் பெறப்படும் மொத்த இறக்குமதிகள் மீதான சராசரி இறக்குமதித் தீர்வை 1995 இன் 10.0 சதவிதத்திலிருந்து 1996 இல் 9.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகள் மீதான சராசரி தீர்வை வீதம் 1995 இன் 22.6 சதவீதத்தில் இருந்து 1996 இல் 21.4 சதவீதத்துக்கு வீழ்ச்சி யடைந்தது. அதே வேளை மொ.உ.உற்பத்தியுடன்

**வரைபடம் 8.2**
**அரசிறை உள்ளமைப்பு**




தொடர்பான இறக்குமதித் தீர்வைச் சேகரிப்புக்கள் 1995 இன் 3.6 சதவீதத்தில் இருந்து 1996 இல் 3.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

1996 இல் வருமானவரியிலிருந்தான அரசிறை ரூ. 207,510 இலட்சமாக விளங்கி 1995 இனைவிட 21 சதவீதம் கொண்ட செழிப்பான வளர்ச்சியினை பிரதிபலித்தது. மொத்த வரி வருவாயில் வருமான வரிகளின் பங்கு 1995 இன் 14 சதவீதத்தில் இருந்து 1996 இல் 16 சதவீதத்துக்கு அதிகரித்ததுடன் முன்னைய இரு ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 2.6 சதவீதத்தில் இருந்து 1996 இன் மொ.உ. உற்பத்தியின் 2.7 சதவீதத்திற்கு சிறிதளவு அதிகரித்தது. வரி அடிமட்டம் ஆண்டொன்றுக்கு ரூ. 60,000 இலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ.100,000 இற்கு அதிகரிக்கப்பட்டமை, வரிப்பிரிவுகள் விரிவாக்கப்பட்டமை, இடை நிலை வரி வீதங்கள் குறைக்கப்பட்டமை என்பன வற்றின் காரணமாக தனியார் வருமான வரிகளிலிருந்தான பெறுகை கள் ரூ. 73,150 இலட்சமாக விளங்கி 430 இலட்சம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. மாதாந்தம் ரூ. 15,000 இற்கும் ரூ.30,000 இற்கும் இடையில் ஊதியத்தை வருமானமாகப் பெறும் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் மீது விதிக்கப்பட்ட 2 சதவீத வரியையும் மாதாந் தம் ரூ. 30,000 மேல் மாதாந்த ஊழியத்தைப் பெறும் ஊழியர்கள் மீது விதிக்கப்பட்ட 3 சதவீத வரியையும் கொண்ட நாட்டைக்காக்கும் உதவு தொகை என்ற புதிய வரியிலிருந்தான அரசிறை 1996 இல் ரூ. 1,250 இலட்சமாக விளங்கியது. அதே வேளை கூட்டு வருமான வரிகள் மீது விதிக்கப்பட்ட மேலதிக கட்டணங்கள் நிறுத்தப் பட்ட போதும் கூட்டுவருமான வரிகளிலிருந் தான சேகரிக்கப்பட்ட அரசிறை ரூ. 133,110 இலட்சமாக விளங்கி 36 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியமைக்கு குறைத்து காட்டப் பட்ட வருமானத்திலிருந்து சேகரிக்கப்பட்ட ரூ.14,760 இலட்சம் தொகையில் பிரதிபலிக்கப் பட்டவாறு வரி நிருவாகத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், தொலைத்தொடர்பூட்டல், வங்கித்தொழில் காப்புறுதியும் போன்ற பணிகள் துறை நடவடிக்கைகளில் ஏற்பட்ட முன்னேற் றங்கள் மற்றும் 1996 இல் துறைமுக மேலாண்மைச் சபையின் வருமான வரி நிலுவையாக இருந்த ஏறத்தாழ ரூ. 10,000 இலட்ச கொடுப்பனவு என்பனவே காரணமாகும்.

## அட்டவணை 8.2
## மூலகங்களின்படி அரசிறையின் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1996 தற்காலிகம் | 1997 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **வரி அரசிறை** | **76,353** | **85,891** | **99,417** | **118,543** | **132,645** | **130,202** | **151,451** |
| வருமானவரிகள் | 10,967 | 12,543 | 15,277 | 17,161 | 17,299 | 20,751 | 21,345 |
| தனிப்பட்ட | 4,067 | 5,235 | 5,621 | 7,358 | 4,787 | 7,315 | 7,825 |
| கூட்டு | 6,900 | 7,308 | 9,656 | 9,803 | 11,762 | 13,311 | 13,120 |
| நாட்டைக் காக்கும் உதவுதொகை | - | - | - | - | 750 | 125 | 400 |
| சொத்துக்கள் மீதான வரிகள் | 3,597 | 3,493 | 4,386 | 5,162 | 5,839 | 5,279 | 6,788 |
| மத்திய வங்கியினால் உடமையாக கொள்ளப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மீதான வரி | 1,991 | 1,073 | 471 | 1,050 | - | 1,604 | 350 |
| உள்நாட்டு பொருட்கள் பணிகள் மீதான வரிகள் | 38,158 | 47,963 | 56,685 | 70,797 | 80,807 | 77,105 | 92,883 |
| பொது விற்பனைகளும் வியாபார மொத்த விற்பனவு வரியும் | 24,095 | 29,663 | 32,300 | 36,429 | 40,695 | 37,631 | 43,478 |
| தயாரிப்பு | 8,262 | 9,231 | 9,171 | 9,906 | 9,699 | 8,874 | 12,023 |
| தயாரிப்பு அல்லா | 3,546 | 4,825 | 6,445 | 7,074 | 8,772 | 9,711 | 8,922 |
| இறக்குமதிகள் | 12,287 | 15,607 | 16,684 | 19,449 | 22,224 | 19,046 | 22,532 |
| கலால்தீர்வை | 10,232 | 11,655 | 14,632 | 19,436 | 21,775 | 22,067 | 28,936 |
| வெறியக் குடிவகைகள் | 3,434 | 4,063 | 4,686 | 6,298 | 5,950 | 5,839 | 7,780 |
| புகையிலை | 5,573 | 6,866 | 7,888 | 8,788 | 11,195 | 12,833 | 15,175 |
| ஏனைய | 1,225 | 726 | 2,058 | 4,350 | 4,630 | 3,395 | 5,981 |
| பாதுகாப்புத் தீர்வை | 3,764 | 6,589 | 9,693 | 14,408 | 16,090 | 16,441 | 18,426 |
| உரிமக்கட்டணங்கள் | 67 | 56 | 60 | 524 | 2,247 | 966 | 2,043 |
| சர்வதேச வர்த்தகத்தின் மீதான வரிகள் | 21,640 | 20,762 | 22,598 | 24,365 | 28,700 | 25,458 | 30,085 |
| இறக்குமதிகள் | 20,819 | 20,762 | 22,598 | 24,365 | 28,700 | 25,458 | 30,085 |
| ஏற்றுமதிகள் | 821 | 57 | - | 8 | - | 5 | - |
| **வரியல்லா அரசிறை** | **9,428** | **12,448** | **10,621** | **17,715** | **15,562** | **16,077** | **19,285** |
| சொத்து வருவாய் | 6,262 | 8,154 | 7,360 | 12,856 | 10,082 | 10,059 | 12,046 |
| அதில் மத்தியவங்கியின் இலாபங்கள் | 1,150 | 1,000 | 1,200 | 1,200 | 1,200 | 1,700 | 1,500 |
| வட்டி வருவாய் | 3,596 | 4,360 | 4,560 | 6,946 | 6,006 | 5,222 | 6,496 |
| வர்த்தக தொழில்முயற்சிகளின் மிகை | 1,179 | - | - | - | - | - | - |
| அறவீடுகளும், கட்டணங்களும் | 1,225 | 1,303 | 988 | 1,751 | 2,650 | 2,827 | 3,066 |
| ஏனைய வரியல்லா வருவாய் | 1,941 | 2,991 | 2,273 | 3,108 | 2,830 | 3,191 | 4,173 |
| மொத்த வருவாய் | 85,781 | 96,339 | 110,038 | 136,258 | 148,207 | 146,279 | 170,836 |

| விடயம் | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1995 தற்காலிகம் | 1997 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **வரி அரசிறை** | **18.0** | **17..2** | **17.2** | **17.8** | **17.1** | **16.9** | ***17.0*** |
| வருமானவரிகள் | 2.6 | 2.5 | 2.6 | 2.6 | 2.2 | 2.7 | 2.4 |
| தனிப்பட்ட | 1.0 | 1.0 | 1.0 | 1.1 | 0.6 | 1.0 | *0.9* |
| கூட்டு | 1.6 | 1.5 | 1.7 | 1.5 | 1.5 | 1.7 | *1.5* |
| நாட்டைக் காக்கும் உதவுதொகை | | - | - | - | 0.1 | 0.0 | 0.0 |
| சொத்துக்கள் மீதான வரிகள் | 0.8 | 0.7 | 0.8 | 0.8 | 0.8 | 0.7 | 0.8 |
| மத்திய வங்கியினால் உடமையாக கொள்ளப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மீதான வரி | 0.5 | 0.2 | 0.1 | 0.2 | 0.0 | 0.2 | 0.0 |
| உள்நாட்டு பொருட்கள் பணிகள் மீதான வரிகள் | 0.9 | 0.6 | 0.8 | 10.6 | 10.4 | 10.0 | 10.4 |
| பொது விற்பனைகளும் வியாபார மொத்த விற்பனவு வரியும | 5.7 | 5.9 | 5.6 | 5.5 | 5.2 | 4.8 | 4.9 |
| தயாரிப்பு | 1.9 | 1.8 | 1.6 | 1.5 | 1.3 | 1.2 | 1.3 |
| தயாரிப்பு அல்லா | 0.8 | 1.0 | 1.1 | 1.1 | 1.1 | 1.3 | 1.0 |
| இறக்குமதிகள் | 2.9 | 3.1 | 2.9 | 2.9 | 2.9 | 2.5 | 2.5 |
| கலால்தீர்வை | 2.4 | 2.3 | 2.5 | 2.9 | 2.8 | 2.9 | 3.2 |
| வெறியக் குடிவகைகள் | 0.8 | 0.8 | 0.8 | 0.9 | 0.8 | 0.8 | 0.9 |
| புகையிலை | 1.3 | 1.4 | 1.4 | 1.3 | 1.4 | 1.7 | 1.7 |
| ஏனைய | 0.3 | 0.1 | 0.4 | 0.7 | 0.6 | 0.4 | 0.7 |
| பாதுகாப்புத் தீர்வை | 0.9 | 1.3 | 1.7 | 2.2 | 2.1 | 2.1 | 2.1 |
| உரிமக்கட்டணங்கள் | - | - | - | 0.1 | 0.3 | 0.1 | 0.2 |
| சர்வதேச வர்த்தகத்தின் மீதான வரிகள் | 5.1 | 4.2 | 3.9 | 3.6 | 3.7 | 3.3 | 3.4 |
| இறக்குமதிகள் | 4.9 | 4.2 | 3.9 | 3.6 | 3.7 | 3.3 | 3.4 |
| ஏற்றுமதிகள் | 0.2 | - | - | - | - | - | - |
| **வரியல்லா அரசிறை** | **2.2** | **2.5** | **1.8** | **2.7** | **2.0** | **2.1** | **2.2** |
| சொத்து வருவாய் | 1.5 | 1.6 | 1.3 | 2.0 | 1.3 | 1.3 | 1.4 |
| அதில் மத்திய வங்கியின் இலாபங்கள் | 0.3 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 |
| வட்டி வருவாய் | 0.8 | 0.9 | 0.8 | 1.0 | 0.8 | 0.7 | 0.7 |
| வர்த்தக தொழில்முயற்சிகளின் மீதான மிகை | 0.3 | - | - | - | - | - | - |
| அறவீடுகளும், கட்டணங்களும் | 0.3 | 0.3 | 0.2 | 0.3- | 0.3 | 0.4- | 0.3 |
| ஏனைய வரியல்லா வருவாய் | 0.5 | 0.6 | 0.4 | 0.4 | 0.4 | 0.4 | 0.5 |
| **மொத்த வருவாய்** | **20.0** | **19.7** | **19.0** | **20.4** | **19.1** | **19.0** | **19.1** |

1996 இல் முத்திரைத் தீர்வை ரூ. 52,790 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 18 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினை பதிவு செய்தது. படிப்படியாக நழுவிச் செல்லும் அளவுகளின் அடிப்படையில் மொத்தப் பெறுகைகளின் மீதான முத்திரைத் தீர்வையில் திருத்தங்கள் செய்யப்பட்ட போதும் இறக்குமதிகளில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சி மற்றும் முறிகளும் படுகடன் பிணைகளும் முத்திரை தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டமை என்பன அதிகரிக்கப்பட்ட அரசிறை வழி முறைகளினூடாக எதிர்பார்க்கப்பட்ட உயர்ந்த அரசிறைச் சேகரிப்புக்களை ஓரளவு எதிரீடு செய்தன.

## வரியல்லா அரசிறை

1996 இல் வரியல்லா அரசிறை 9 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தமையானது முக்கியமாக சொத்து வருவாய் 1995 இன் ரூ. 128,560 இலட்சத்திலிருந்து 1996 இல் ரூ. 100,590 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தமையில் முக்கியமாக பிரதிபலித்தது. 1996 இல் மத்திய வங்கியினால் மாற்றல் செய்யப்பட்ட இலாபம் ரூ. 17,000 இலட்சமாக விளங்கியது. தேசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத் தாபனமும் வட்டிக் கொடுப்பனவுகளை பிற்போட்டமை, 1996இன் நிதிச் சட்டத்தின் கீழ் பொது முயற்சிகளின் மீது விதிக்கப்பட்ட பங்குஇலாபங்களின் குறைந்த தொகை மற்றும் இரு அரச வங்கிகளினதும் பங்கு இலாப கொடுப்பனவுகள் குறைந்தமை என்பனவே சொத்துவருமானம் குறைவடைய முக்கிய காரணங்களாக இருந்தன. அதே வேளை, கட்டணங்கள், விதிப்புக் கட்டணங்களிலிருந்தான அரசிறை ரூ. 17,510 இலட்சத்தில் இருந்து ரூ.28,270 இலட்சத்துக்கு அதிகரித்தமைக்கு கடவுச்சீட்டு, விசாக் கட்டணங்களின் மேல்நோக்கிய திருத்தம் மறறும் அரச திணைக்களங்களினால் வழங்கப்பட்ட பணிகள் மீதான கட்டணங்கள் மற்றும் விதிப்புக் கட்டணங்களில் ஏற்பட்ட 20 சதவீதம் கொண்ட அதிகரிப்பின் முழு ஆண்டுத்தாக்கம் என்பன காரணங்களாக அமைந்தன. ரூ. 31,910 இலட்சமாக அமைந்த ஏனைய வரியல்லா வருவாய் 3 சதவீத அதிகரிப்பைக் காட்டியமைக்கு சமூக பாதுகாப்பு உதவுதொகைகள் கணிசமாக அதிகரித்தமையே காரணமாகும்.

## வெளிநாட்டுக்கொடைகள்

1996 இல் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கொடைகள் ரூபா. 85,000 இலட்சமாக அமைந்து 6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இதன் விளைவாக கடந்த அண்மைக் காலத்தில் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்திருந்த மொ.உ. உற்பத்திக்கான மொத்த வெளிநாட்டுக் கொடைகள் 1995 இன் 1.4 சதவீதத்தில் இருந்து 1996 இல் 1.1 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தன. செயற்றிட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்ட கொடைகளின் பேரிலான பெறுகைகள் ரூ. 61,400 இலட்சமாக விளங்கிய வேளையில் பண்ட மற்றும் உணவு உதவி ரூ.12,360 இலட்சமாக விளங்கியது. ரூ. 3,620 இலட்சம் கொண்ட தொகை தொழில் நுட்ப உதவியின் கீழ் பெறப்பட்ட வேளையில் மிகுதி ரூபா. 7,610 இலட்சம் கொண்ட தொகை வகைப்படுத்தப்படாதிருந்தது. முன்னைய ஆண்டினைப் போன்றே யப்பான் ரூ. 28,800 இலட்சத்தினை வழங்கி தொடர்ந்தும் முதன்மைக் கொடையாளராக விளங்கிய வேளையில் அதனைத்தொடர்ந்து ரூ. 24,240 இலட்சத்தினை வழங்கிய நோர்வே காணப்பட்டது.

## 8.4 செலவினம்

1996 இல் மொத்த அரச செலவினமும் தேறிய கடன் வழங்கலும் ரூ. 2,147,100 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 19 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 7 சதவீதம் கொண்ட அதிகரிப்பை பதிவு செய்தது. எனினும் மொ.உ. உற்பத்தியின் விகிதமாக மொத்த செலவினம் 1995 இன் 30. 0 சதவீதத்தில் இருந்து 1996 இல் 27.9 சதவீதத்திற்கு மிகக் கூடுதலாக வீழ்ச்சியடைந்தது. நடைமுறைச் செலவினம் ரூ. 1,706,290 இலட்சமாக விளங்கி மொத்தச் செலவினத்தில் முன்னைய ஆண்டின் 77 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 79 சதவீதத்திற்கு வகைகூறியது. 1996 இன் அரச முதலீடுகள் ரூ.483,700 இலட்சமாக விளங்கி 8 சதவீத வீழ்ச்சியைக் காட்டிய வேளையில் மொ.உ. உற்பத்தியின் விகிதமாக இது 1995 இன் 8.0 சதவீதத்தில் இருந்து 1996 இல் 6.3 சதவீதத்திற்கு

வீழ்ச்சியடைந்தது.

## நடைமுறைச் செலவினம்

1996 இன் நடைமுறைச் செலவினம் ரூ.1,706,290 இலட்சமாக அமைந்து 11 சதவீத அதிகரிப்பினை பதிவு செய்தது. இது 1996 இல் 15 சதவீதமாகக் காணப்பட்ட பேரளவு மொ.உ. உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தினை விட கணிசமான அளவு குறைவானதாகும். இதன் விளைவாக மொ.உ.உற்பத்தியின் விகிதமாக நடைமுறைச் செலவினம் 1995 இன் 23.1 சதவீதத்தில் இருந்து 1996 இன் 22.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பாதுகாப்பு, அரசதுறைச் சம்பளங்கள், ஒய்வூதியங்கள் மற்றும் அரச படுகடன் மீதான வட்டி கொடுப்பனவுகள் மீதான செலவினம் முன்னைய ஆண்டினைப் போன்றே 1996 இலும் மொத்தச் செலவினத்தில் 77 சதவீதமாக காணப்பட்டது. தற்போதய நிலையில் மூலதனச் செலவுகளில் கடுமையான கட்டுப்பாடுகள் காணப்பட்ட போதும் வரவு செலவுத்திட்டதில் இலக்கிட்டப்பட்டவாறு நடைமுறைச் செலவினத்தினை 21.9 சதவீதத்தில் அரசினால் கட்டுப்படுத்த முடியாமல் போனமைக்கு பாதுகாப்பு மீதான உயர்ந்த செலவினமே முக்கிய காரணமாக இருந்தது.

1995 இன் ஆசிரியர்களுக்கான சம்பள திருத்தங்களைத் தொடர்ந்து 1995 இன் சம்பள அதிகரிப்புக்கள் எதனையும் பெற்றிராத அனைத்து அரச ஊழியர்களினதும் சம்பளங்கள் சம்பள மீளாய்வு ஆணைக்குழுவின் விதந்துரைப்புகளுக்கேற்ப மேல்நோக்கி திருத்தப்பட்டன. புதிய சம்பளத் திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வரை முதல் 6 மாத காலப்பகுதிக்கு இடைக்காலப் படியாக மாதாந்தம் ரூ. 100 உம் யூலையில் இருந்து மாதாந்தம் ரூ. 250 உம் செலுத்தப்பட்டன. அத்துடன் போர்நடவடிக்கைப் பிரதேசங்களில் தொழில் புரியும் பாதுகாப்பு ஆளணியினருக்கு 1996 இல் மேலதிக படியொன்றும் வழங்கப்பட்டது. இதன் விளைவாக, தனியார் ஊதியங்களின் மொத்தச் செலவு 1995 இன் ரூ. 349,090 இலட்சத்தில் இருந்து 1996 இல் ரூ. 383,320 இலட்சத்திற்கு 10 சதவீதத்தினால் அதிகரித்தன. பாதுகாப்புப் பணிகளுக்கான ரூ. 133,320 இலட்சத்தினை உள்ளடக்கிய மொத்தக் கூலிப்பட்டியல் 1996 இல் 10 சதவீத அதிகரிப்பினை பதிவு செய்தது. சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் நடைமுறைச் செலவினத்தில் 22 சதவீதத்திற்கு வகை கூறிய வேளையில் மொத்த அரச அரசிறையில் இதன்பங்கு 26 சதவீதமாக இருந்தது. மொ.உ.உற்பத்தியின் விகிதமாக மொத்த கூலிப்பட்டியல் 1995 இன் 5.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.0 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.

பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 460,210 இலட்சமாக விளங்கி 1995

**வரைபடம் 8.3**
**செலவின் உள்ளமைப்பு**



அட்டவணை 8.3

செலவினம் மற்றும் மீள்கொடுப்பனவை கழித்த கடன்வழங்கலின் பொருளாதார பகுப்பாய்வு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1996 தற்காலிகம் | 1997 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவினம்** | **89,639** | **102,288** | **127,084** | **154,159** | **169,781** | **170,629** | **177,930** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 39,692 | 44,895 | 54,700 | 75,447 | 82,519 | 78,666 | 83,086 |
| சம்பளங்களும், கூலிகளும் | 20,793 | 26,332 | 29,309 | 34,909 | 39,978 | 38,332 | 44,603 |
| ஏனைய பொருட்களும், பணிகளும் | 18,898 | 18,563 | 25,391 | 40,538 | 42,541 | 40,334 | 38,483 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 25,940 | 30,203 | 38,031 | 38,225 | 44,057 | 46,021 | 49,800 |
| வெளிநாட்டு | 4,739 | 5,102 | 5,511 | 6,162 | 7,351 | 6,739 | 8,338 |
| உள்நாட்டு | 21,201 | 25,101 | 32,520 | 32,063 | 36,706 | 39,282 | 41,462 |
| நடைமுறை மாற்றல்களும், உதவிக்கொடுப்பனவுகளும் | 24,007 | 27,190 | 34,180 | 40,487 | 48,105 | 46,813 | 44,044 |
| அரசகூட்டுத்தாபனங்களுக்கு | 1,428 | 1,571 | 2,634 | 7,841 | 6,308 | 8,232 | 2,239 |
| அரசநிறுவனங்களுக்கு | 1,649 | 2,031 | 1,976 | 2,182 | 2,739 | 2,284 | 3,931 |
| அரச ஏனைய மட்டங்களுக்கு | 1,111 | 896 | 1,307 | 1,157 | 1,512 | 1,592 | 1,464 |
| குடும்ப அலகுகளுக்கும் ஏனைய துறைகளுக்கும் | 19,819 | 22,692 | 28,263 | 29,307 | 37,545 | 34,706 | 36,410 |
| உணவுமுத்திரை,உணவு உதவிக் கொடுப்பனவு | 4,466 | 4,580 | 4,654 | 1,799 | 1,082 | 506 | 385 |
| ஜனசவிய / சமுர்த்தி | 3,098 | 3,685 | 5,369 | 5,130 | 11,794 | 8,591 | 8,692 |
| ஓய்வூதியங்கள் | 8,098 | 10,516 | 13,271 | 14,549 | 16,825 | 15,465 | 18,075 |
| பசளை உதவிக் கொடுப்பனவு | - | - | 630 | 1,345 | 1,500 | 1,500 | 1,500 |
| ஏனையவை | 4,156 | 3,911 | 4,339 | 6,484 | 6,345 | 8,644 | 6,658 |
| குறைச்செலவுக்கான ஒதுக்கீடு | - | - | - | - | -4,900 | -872 | 1,000 |
| **மூலதனச் செலவினம்** | **24,949** | **33,662** | **30,391** | **41,722** | **43,203** | **40,034** | **47,879** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 12,604 | 19,719 | 16,747 | 22,589 | 27,313 | 24,576 | 28,726 |
| மூலதன மாற்றல்கள் | 12,345 | 13,943 | 13,644 | 19,134 | 18,290 | 16,701 | 19,153 |
| அரசகூட்டுத்தாபனங்களுக்கு | 4,610 | 4,311 | 4,246 | 7,614 | 5,123 | 6,017 | 6,371 |
| அரச நிறுவனங்களுக்கு | 6,663 | 8,551 | 8,433 | 10,446 | 12,119 | 9,603 | 11,532 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு | 1,028 | 1,036 | 914 | 1,057 | 1,000 | 1,042 | 1,200 |
| ஏனைய | 44 | 45 | 51 | 17 | 49 | 39 | 50 |
| குறைச்செலவுக்கான ஒதுக்கீடு | - | -- | - | - | -2,400 | -1,243 | - |
| **மீள்கொடுப்பனவு கழித்த கடன்வழங்கல்** | **2,386** | **4,510** | **10,293** | **4,601** | **-4,499** | **4,047** | **9,761** |
| முற்பணக்கணக்குகள் | -150 | 410 | 2,462 | -1,580 | 500 | 630 | 500 |
| கடன்வழங்கல் | 6,246 | 6,265 | 10,064 | 11,087 | 15,313 | 8,336 | 12,665 |
| மீளமைப்புச் செலவு | 1,750 | 1.465 | 3,739 | 3,191 | 4,792 | 2,992 | 6,492 |
| தனியார் மயப்படுத்தல் பெறுகைகள் | -2,850 | -1,200 | -2,996 | -3,001 | -21,000 | -4,728 | -5,000 |
| கடன்மீள் கொடுப்பனவுகள் | -2,610 | -2,430 | -2,976 | -5,097 | -4,104 | -3,182 | -4,896 |
| **மொத்தசெலவினமும், தேறிய கடன்வழங்கலும்** | **116,974** | **140,460** | **167,768** | **200,482** | **208,485** | **214,710** | **235,570** |

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமொன்றாக

| விடயம் | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1996 தற்காலிகம் | 1997 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவினம்** | **21.1** | **20.5** | **21.9** | **23.1** | **21.9** | **22.2** | **19.9** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 9.3 | 9.0 | 9.4 | 11.3 | 10.6 | 10.2 | 9.3 |
| சம்பளங்களும், கூலிகளும் | 4.9 | 5.3 | 5.1 | 5.2 | 5.2 | 5.0 | 5.0 |
| ஏனைய பொருட்களும், பணிகளும் | 4.4 | 3.7 | 4.4 | 6.1 | 5.5 | 5.2 | 4.3 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 6.1 | 6.0 | 6.6 | 5.7 | 5.7 | 6.0 | 5.6 |
| வெளிநாட்டு | 1.1 | 1.0 | 1.0 | 0.9 | 0.9 | 0.9 | 0.9 |
| உள்நாட்டு | 5.0 | 5.0 | 5.6 | 4.8 | 4.7 | 5.1 | 4.6 |
| நடைமுறை மாற்றல்களும், உதவிக்கொடுப்பனவுகளும் | 5.6 | 5.4 | 5.9 | 6.1 | 6.2 | 6.1 | 4.9 |
| அரசகூட்டுத்தாபனங்களுக்கு | 0.3 | 0.3 | 0.5 | 1.2 | 0.8 | 1.1 | 0.3 |
| அரசநிறுவனங்களுக்கு | 0.4 | 0.4 | 0.3 | 0.3 | 0.4 | 0.3 | 0.4 |
| அரச ஏனைய மட்டங்களுக்கு | 0.3 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 |
| குடும்ப அலகுகளுக்கும் ஏனைய துறைகளுக்கும் | 4.7 | 4.5 | 4.9 | 4.4 | 4.8 | 4.5 | 4.1 |
| உணவுமுத்திரை,உணவு உதவிக் கொடுப்பனவு | 1.1 | 0.9 | 0.8 | 0.3 | 0.1 | 0.1 | 0.0 |
| ஜனசவிய / சமுர்த்தி | 0.7 | 0.7 | 0.9 | 0.8 | 1.5 | 1.1 | 1.1 |
| ஓய்வூதியங்கள் | 1.9 | 2.1 | 2.3 | 2.2 | 2.2 | 2.0 | 2.0 |
| பசளை உதவிக் கொடுப்பனவு | 0.0 | 0.0 | 0.1 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 |
| ஏனையவை | - | - | 0.7 | 1.0 | 0.8 | 1.1 | 0.7 |
| குறைச்செலவுக்கான ஒதுக்கீடு | - | - | - | - | -0.6 | -0.1 | - |
| **மூலதனச் செலவினம்** | **5.9** | **6.7** | **5.2** | **6.2** | **5.6** | **5.2** | **5.4** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 3.0 | 3.9 | 2.9 | 3.4 | 3.5 | 3.2 | 3.2 |
| மூலதன மாற்றல்கள் | 2.9 | 2.8 | 2.4 | 2.9 | 2.4 | 2.2 | 2.1 |
| அரசகூட்டுத்தாபனங்களுக்கு | 1.1 | 0.9 | 0.7 | 1.1 | 0.7 | 0.8 | 0.7 |
| அரச நிறுவனங்களுக்கு | 1.6 | 1.7 | 1.5 | 1.6 | 1.6 | 1.2 | 1.3 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.1 | 0.1 | 0.1 |
| ஏனைய | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| குறைச்செலவுக்கான ஒதுக்கீடு | | - | - | - | - | -0.2 | 0.0 |
| **மீள்கொடுப்பனவு கழித்த கடன்வழங்கல்** | **0.6** | **0.9** | **1.8** | **0.7** | **-0.6** | **0.5** | **1.1** |
| அதில் முற்பணக்கணக்குகள் | - | 0.1 | 0.4 | -0.2 | 0.1 | 0.1 | 0.1 |
| **மொத்தசெலவினமும், தேறிய கடன்வழங்கலும்** | **27.5** | **28.1** | **29.0** | **30.0** | **26.9** | **27.9** | **26.4** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இன் சிறிதளவு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 20 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பினை பதிவு செய்த வேளையில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகப் பார்க்கையில் முன்னைய ஆண்டின் 5.7 சதவீதத்தில் இருந்து 6.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. உள்நாட்டு படுகடனின் வட்டிச் செலவு ரூ. 392,820 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினை விட 23 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. ரூபா பிணைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி ரூ. 203,110 இலட்சமாக விளங்கி 12 சதவீத அதிகரிப்பினை பதிவு செய்த வேளையில் ரூபா கடன்கள் மீதான சராசரி வட்டிவீதம் ஏறத்தாள 13.8 சதவீதமாக இருந்தது. ரூபாக்கடன் இருப்பு, தேறிய முறிவழங்கல்கள் என்பன ரூ. 241,740 இலட்சத்தினால் அதிகரித்தமை 1996 இன் முதலரைப் பகுதியில் ஆண்டுக்கு 13–15 சதவீத உயர்ந்த வீத வீச்சில் ரூபா கடன்கள் வழங்கப்பட்ட மை என்பன 1996 இல் ரூபாக்கடன்கள் மீதான மொத்த வட்டிச் செலவினை அதிகரித்தன. அதே வேளை, திறைசேரி உண்டியல் மீதான வட்டிச் செலவு ரூ. 180,530 இலட்சத்துக்கு 29 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டியமைக்கு 1996 இன் முதல் 10 மாதக் காலப்பகுதியில் திறைசேரி உண்டியல்களின் புதிய வழங்கல்கள் ரூ. 112,250 இலட்சத்துக்கு அதிகரித்தமை 1995 இலும் அதன் பின் 1996 பெப்புரவரி வரையிலும் நிலவிய வட்டி வீதங்கள், 1996 இல் வழங்கப்பட்ட மூன்று மாத திறைசேரி உண்டியல்களின் உயர்ந்த விகிதம் என்பனவே காரணங்களாக இருந்தன. ஓராண்டு முதிர்ச்சியைக்கொண்ட திறைசேரி உண்டி யல்கள் மீதான வட்டிவீதங்கள் 1994 இல் ஆண்டுக்கு 12.20 இலிருந்து 19.43 சதவீதம் வரையான வீச்சுக்கும், 1995 இல் ஆண்டுக்கு 13.68 சதவீதத்தில இருந்து 20.45 சதவீதம் வரையான வீச்சுக்கும் 1996 இல் ஆண்டுக்கு 14.40 சதவீதத்திலிருந்து 19.05 சதவீதம் வரையிலான வீச்சுக்கும் இடையில் காணப் பட்டது. வெளிநின்ற இருப்பு, ஒப்புதல் அளிக்கப்பட்ட திறைசேரி உண்டியல் உச்ச எல்லை ரூ. 125 பில்லி யனை அடைந்தமையானது திறைசேரி உண்டியலு டனான கடன்பாடுகளின் உச்ச எல்லை திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிச் செலவு மேலும் அதிகரிக்காத விதத்தில் தடுத்துவிட்டது. திறைசேரி உண்டியல்களின் சராசரி வட்டிச் செலவு முன்னைய ஆண்டின் 14.10 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்கு 15.86 சதவீதமாக இருந்தது. 1996 இல் வெளிநாட்டு கடன்பாடுகளின் வட்டிச் செலவு ரூ. 67,390 இலட்சத்துக்கு 9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஆரம்ப வரவு செலவுத்திட்ட மதிப்பீடு ரூ. 73,510 இலட்சமாக விளங்கியது. நீண்ட சலுகை காலத்துடன் கூடிய குறைந்த செலவில் சலுகை கடன்களை பெறக்கூடியதாக அரசு இருந்தமையும் 1996 இல் யப்பானிய யென்னுக்கு எதிராக ரூபா 7 சதவீதத்தினால் உயர் வடைந்தமையும் (வெளிநின்ற மொத்த வெளிநாட்டு படுகடன் பொறுப்பில் ஏறத்தாள 30 சதவீதம் யென்னிலேயே காணப்படுகின்றது.) 1996 இன் வெளிநாட்டின் படுகடன் குறைந்த வட்டிச் செலவுக்கு உதவிய முக்கிய காரணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. வெளிநிற்கும் வெளிநாட்டுப் படுகடனின் சலுகை ரீதியான தன்மையை எடுத்துக்காட்டும் விதத்தில் வெளிநாட்டு படுகடன் இருப்பு மீதான சராசரி வட்டி வீதம் 1995 இன் 1.8 சதவீதத்துடன் ஒப்பிடு கையில் 1.9 சதவீதமாகக் காணப்பட்டது.

குடும்ப அலகுகள், அரச கூட்டுத்தா பனங்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளூராட்சி மன்றங்கள் என்பனவற்றிற்கான மாற்றல்களை உள்ளடக்கிய மாற்றல் கொடுப்பனவுகளின் மொத்தத் தொகை ரூ. 468,130 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 18 சதவீதத்தடன் ஒப்பிடுகையில் 16 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன. 1995 இலும் 1996 இலும் மேற்கொள்ளப்பட்ட 13 பெருந்தோட்டக்கம்பனிகளின் தனியார் மயமாக் கலின் விளைவாக பெருந்தோட்டத் துறைக்கான நடைமுறை மாற்றல்கள் குறைவடைந்த போதும், அரச கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் ரூ. 82,320 இலட்சத்துக்கு 5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு புகை வண்டி மற்றும் அஞ்சல் திணைக்களங்களின் அதிகரித்த தொழிற்பாட்டு இழப்புக்கள் மற்றும் 1996 இல் கோதுமை மா மீதான பெருமளவு செலவினம் என்பனவே முக்கிய காரணமாகும். 1996 காலப்பகுதியில் கோதுமை மா விலைகள் கி.கிறாமிற்கு ரூ. 11.95 இலிருந்து கி.கிறாமிற்கு ரூ. 16.95 வரை பலமுறை மேல்நோக்கி திருத்தப்பட்ட போதும், மா விற்பனைகள் தொடர்பாக எழுந்த இழப்புக்களின் பேரில் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்திற்கு செய்யப்பட்ட மொத்த நடைமுறை மாற்றல்கள் முன்னைய ஆண்டில் ரூ. 62,000 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ ரூ. 55,150 இலட்சமாகக்

காணப்பட்டது. சருவதேச சந்தையில் கோதுமைத் தானியத்தின் விலைகள் 1995 இல் மெற்றிக் தொன் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 186 இலிருந்து 1996 இல் மெற்றிக் தொன் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 221 க்கு (சராசரி கொ.க விலை) 19 சதவீதத்தினால் மிகக் கூடுதலாக உயர்வடைந்தமை, ஐ.அ டொலருக்கு எதிராக ரூபாவின் செலாவணி வீதம் 8 சதவீதத்தினால் தேய்வடைந்தமை மற்றும் கோதுமைமாவின் பங்கீட்டு தொழிற் பாட்டுச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன 1995 இன் கி.கிறாம் ஒன்றுக்கான ரூ. 9.02 உடன் ஒப்பிடுகையில் விலைத்திருத்தங்களின் பின்னரும் கூட 1996 இல் கி.கிறாம் ஒன்றுக்கு ரூ. 6.97 கொண்ட சராசரி இழப்பினை விளைவித்தன. 1996 இன் கோதுமைத்தானியத்தின் நுகர்வு 1995 இன் 683,683 மெற்றிக்தொன்னுடன் ஒப்பிடுகையில் 692,164 மெற்றிக் தொன்களாக மிக உயர்வாகக் காணப்பட்டது. நெல் உற்பத்தி 27 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையின் விளைவாக தோன்றிய பற்றாக்குறையான நிரம்பலின் காரணமாக அரிசி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் உயர்ந்த விலைகள் என்பன 1996 இல் கோதுமை மாவின் உயர்ந்த மட்ட நுகர்வுக்கு பங்களித்தன. இக் காரணிகளின் அதாவது கோதுமைத்தானியத்தின் உயர்ந்த விலைகள் ரூபாவின் தேய்வு, கோதுமை தானியத்தின் உயர்ந்த மட்ட நுகர்வு என்பனவற்றின் இணைந்த தாக்கமானது கோதுமைமாவில் செய்யப்பட்ட உள்நாட்டு விலைச்சீராக்கங்களின் தாக்கத்தினை எதிரீடு செய்து 1996 இன் மா விற்பனைகளின் மீது கணிசமான உதவு தொகையினை தேவைப்படுத் தியது. அதே வேளை அரச நிறுவனங்களுக்கான மாற்றல்கள் 1995 இன் ரூ. 21,820 இலட்சத்திலிருந்து 1996 இன் ரூ. 22,840 இலட்சத்துக்கு சிறிதளவால் அதிகரித்தது. எனினும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான மொத்த நடைமுறை மாற்றல்கள் 1995 இன் மொ.உ.உற்பத்தியில் 1.5 சதவீதத்தில இருந்து 1996 இன் மொ.உ. உற்பத்தியின் 1.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

புகை வண்டி மற்றும் அஞ்சல் திணைக்களங்களின் தொழிற்பாட்டு இழப்புக் களின் பேரிலான மாற்றல் கொடுப்பனவுகள் ரூ. 12,320 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டில் ஏற்பட்ட இழப்புக்களிலும் பார்க்க 21 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தன. 1996 மாச்சில் புகை வண்டிக் கட்டணங்கள் 15 சதவீதத்தினால் அதிகரித்த போதும் இலங்கை புகைவண்டிப்பகுதியின் மொத்த வருவாய்ச் சேகரிப்புக்கள் 1995 இன் ரூ. 9,470 இலட்சத்தில் இருந்து 1996 ரூ.9,380 இலட்சத்துக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்த வேளையில் மீண்டெழும் செலவினம் ரூ. 18,260 இலட்சத்துக்கு 5 சதவீதத்தி னால் உயர்வடைந்தன. அதே வேளை, அஞ்சல் திணைக்களத்தின் வருவாய்ச் சேகரிப்பு 1995 இல் பதிவு செய்யப்பட்ட மட்டத்துக்கு பெரும்பாலும் சமமானதாக ரூ. 13,260 இலட்சமாகக் காணப்பட்ட வேளையில் நடைமுறைச் செலவினம் ரூ. 16,700 இலட்சத்துக்கு 7 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன் விளைவாக அஞ்சல் திணைக்களத்தின் தொழிற்பாட்டு இழப்புக்கள் ரூ. 3,440 இலட்சத்துக்கு 48 சதவீதத்தினால் உயர்வடைந்த வேளையில் புகை வண்டித்திணைக்களத்தின் இழப்புக்கள் ரூ. 8,880 இலட்சமாக அமைந்து 13 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்ததன் மூலம் 1996 இல் மொத்தத் தொழிற்பாட்டு இழப்புக்கள் ரூ. 12,320 இலட்சமாக காணப்பட்டன.

1996 இல் ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய நலன்புரிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய குடும்ப அலகுகளுக்கான மாற்றல்கள் ரூ. 347,060 இலட்சமாக அமைந்து 18 சதவீத அதிகரிப்பினைக் காட்டின. ஓய்வூதிய கொடுப்பனவுகள் ரூ. 154,650 இலட்சத்துக்கு 6 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் 1996 இன் மொ.உ.உற்பத்தியில் 2 சதவீதத்தினைக் கொண்டிருந்தன. இவ் அதிகரிப்பு ஏறத்தாழ 8000 ஓய்வூதியக்காரர்கள் 1996 இல் புதிதாக ஓய்வு பெற்றமை மற்றும் செலுத்தப்படாதிருந்த வாழ்க்கைப்படிக் கொடுப்பனவுகள் செலுத்தப் பட்டமை என்பனவற்றின் இணைந்த விளை வாகும். அதே வேளை உணவு முத்திரைகள், மண்ணெண்ணெய் முத்திரைகள், சனசக்தி, சமுர்த்தி போன்ற பல்வகை நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை தொழிற்படுத்தக்கூடிய விதத்தில் தனியொரு நிகழ்ச்சித்திட்டதிற்கு ஒன்று திரட்டுவதற்கு ஆரம்ப முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. சமுர்த்தி, சனசக்தி, உணவு முத்திரைகள், மண்ணெண்ணெய் முத்திரைகள், குழந்தைகள் பால் மா உணவு, பள்ளிக்கூட பருவகாலச் சீட்டுக்கள், இலவச பள்ளிக்கூட நூல்கள், இலவச பள்ளிக்கூட சீருடைகள் மற்றும் திரிபோசா கவனிப்பு போன்ற திட்டங்களின் கீழ்

குடும்ப அலகுகளுக்கு நேரடியாக வழங்கப்பட்ட மொத்த உதவு் தொகைகள் 1996 இல் ரூ. 127,350 இலட்சத்திற்கு 21 சதவீதத்தினால் அதிகரித்தன. 1996 இன் தொடக்கத்தில் இருந்து நண்பகல் உணவு் நிகழ்ச்சித் திட்டம் நிறுத்தப்பட்ட போதும் சமுர்த்தி நிகழ்சித் திட்டதின் கீழ் நன்மை பெறுநர்களின் மொத்த எண்ணிக்கை 1995 இன் 1,213,535 இலிருந்து 1996 இல் 1,458,888 இற்கும் சமுர்த்தி வழிகாட்டிகளின் எண்ணிக்கை 23,648 க்கும் சமுர்த்தி மேற்பார்வையாளர்களின் எண்ணிக்கை 1337 இற்கும் அதிகரித்த மையானது 1996 இல் நலன் புரிச்செலவின் கணிசமான அளவுக்கு பங்களித்தன. வடக்கு கிழக்கு மாகாணங்களில் யுத்தம் தீவிரமடைந்த மையானது இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரித்து அகதிகளுடன் தொடர்புபட்ட நிவாரண நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான செலவினத்தை 1995 இன் ரூ. 23,250 இலட்சத்தில் இருந்து 1996 இல் ரூ. 32,750 இலட்சத்திற்கு அதிகரித்தது. அதே வேளை வளமாக்கி உதவு் தொகைத் திட்டத்தின் செலவு் 1995 இன் ரூ. 13,450 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 15,000 இலட்சமாக விளங்கியமைக்கு 1996 இல் அதிகரித்த வளமாக்கி பாவனையே காரணம். இதன் விளைவாக, மொ.உ.உற்பத்தியின் விகிதமாக குடும்ப அலகுகளுக்கான மாற்றல்கள் 1995 இன் 4.4 சதவீதத்தில் இருந்து 1996 இல் 4.5 சதவீதத்திற்கு அதிகரித்தமையை காட்டின. தொழிற்பாட்டு நோக்கங்களுக்குத் தேவைப்பட்ட பல்வேறு பொருட்கள் பணிகளின் செயற்பாட்டின் போது ஏற்பட்ட நடைமுறைச் செலவினம் முன்னைய ஆண்டில் ரூ. 405,380 இலட்சத்தில் இருந்து 1996 இல் ரூ. 403,340 இலட்சத்துக்கு சிறிதளவால் குறைவடைந்தது. இவ் வீழ்ச்சி 1996 இல் பாதுகாப்புச் செலவிலும் குடியியல் நிருவாகத்திலும ஏற்பட்ட சிறிதளவு் குறைப்பின் இணைந்த விளைவாகும். பாதுகாப்பு் அல்லாத நடவடிக்கைகள் மீதான ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான நடைமுறைச் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப் பட்ட சுருக்க வழிமுறைகளின் காரணமாக அத்தகைய செலவு்கள் 1995 இன் ரூ. 90,340 இலட்சத்தில் இருந்து 1996 இல் ரூ. 94,850 இலட்சத்திற்கு சிறிதளவுக்கு வீழ்ச்சியடைந்தது.

தொழிற்பாட்டு பகுப்பாய்வு் நியதிகளில் கல்வி நலம், நலன்புரி மற்றும் சமூகப் பணிகளை உள்ளடக்கிய சமூகப் பணிகள் மீதான நடைமுறைச் செலவினம் ரூ. 592,940 இலட்சமாக விளங்கி மொத்த நடைமுறைச்செலவினத்தில் 35 சதவீதத்திற்கு வகை கூறியது. கல்வி மற்றும் நலம்மீதான நடைமுறைச் செலவினப் பணிகள் மீதான மொத்தச் செலவினத்தில் 43 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் நலன்புரிக் கொடுப் பனவு்கள் 55 சதவீதத்துக்கு வகை கூறின. எனினும் சமூகப் பணிகள் மீதான மொத்தச் செலவினம் 1995 இன் மொ.உ.உற்பத்தியின் 8.6 சதவீதத்தில் இருந்து 1996 இல் 7.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1996 பொருளாதார பணிகளின் தொழிற் பாடுகள் மற்றும் பேணல்களுக்காக வழங்கப்பட்ட நடைமுறைச்செலவு் ரூ. 88,070 இலட்சத்துக்கு 9 சதவீதத்தினால் அதிகரித்தது. போக்குவரத்து, தொடர்பூட்டல், வர்த்தகம் மற்றும் வணிகம் போன்ற பொருளாதார பணிகள் 1996 இல் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு்க்கு வகைகூறின.

பொதுவாக பொதுமக்கள் பணிகள் மீது ஏற்பட்ட நடைமுறைச் செலவு் ரூ. 531,680 இலட்சமாக அமைந்து 11 சதவீத அதிகரிப்பினைக் காட்டியதுடன் 1996 இன் மொத்த நடைமுறைச் செலவினத்தின் 31சதவீதத்திற்கு வகைகூறியது. பாதுகாப்பு், பொது ஒழுங்கு, மற்றும் ஒழுங்கு என்பன மீதான செலவினம் ரூ. 429,610 இலட்சமாக அமைந்து 4 சதவீத அதிகரிப்பினை கொண்டிருந்தமையினதும், பிரிவு்ச் செயலாளர்கள் மற்றும் மாகாண சபைகளின் அதிகரித்த செலவினத்தின் முக்கிய காரணமாக குடியியல் நிருவாகத்தின் மீதான செலவினம் ரூ. 102,070 இலட்சத்துக்கு 56 சதவீதத்தினால் அதிகரித்த மையினதும் இணைந்த விளைவாகும்.

## அரச முதலீடு

நடைமுறைச் செலவினத்தையு்ம் அரச தொழில் முயற்சிகளுக்கான கடன்வழங்கலை யு்ம் உள்ளடக்கிய அரச முதலீடானது 8 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு் செய்து ரூ. 483,700 இலட்சமாக விளங்கியதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 1995 இன் 8.0 சதவீதத்திலிருந்து 996 இல் 6.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அரச அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் கையேற்கப்பட்ட

உண்மைச் சொத்துக்களையும் அரச கூட்டுத் தாபனங்கள், நிறுவனங்கள் மற்றும் அரசின் ஏனைய துறைகள் ஆகியவற்றிற்கான மூலதன மாற்றல்களையும் உள்ளடக்கிய மூலதன செலவினம் 1995 இன் ரூ. 417,220 இலட்சத்தில் இருந்து 1996 இல் ரூ.400,340இலட்சத்திற்கான 4 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப்பதிவு செய்த வேளையில், அரச தொழில் முயற்சிகளுக்கான கடன்வழங்கல்கள் 1995 இன் ரூ. 110,870 இலட்சத்தில் இருந்து 1996 காலப்பகுதியில் ரூ. 83,360 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் (அமுநி) அரச அமைச்சுக்களினதும் திணைக்களங்க ளினதும் மூலதன இருப்புக்களை அதிகரிக்கச் செய்த உண்மைச் சொத்துக்களின் கையேற்பானது 9 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 245,760 இலட்சமாக விளங்கியது.

அதே வேளையில் ரூ. 156,200 இலட்சமாக விளங்கிய அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான மூலதனமாற்றல்கள் 14 சதவீத குறைப்பினை பிரதிபலித்தன. இதற்கு 1996 இல் மகாவலி மேலாண்மைச் சபைக்கும் வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபைக்குமான மூலதன மாற்றல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே பெருமளவு காரணமாகும். அத்துடன், கப்பல் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்த வேண்டிய ரூ. 23,950 இலட்சம் கொண்ட நிலுவைக்கான மூலதனமாற்றல்களின் உயர்மட்டத்துக்கு 1995 மூலதன மாற்றல்கள் விரிவாக்கப்பட்டமையே காரணமாகும். உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் நேரடியாக ஈடுபட்டுள்ள அரச நிறுவனங்களான வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபை (ரூ. 44,040 இலட்சம்) நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை (ரூ. 7,760 இலட்சம்) தென்பகுதி அபிவிருத்திச் செயற்றிட்டம் (ரூ. 3,340 இலட்சம்) தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை (ரூ. 33,130 இலட்சம்) நில மீட்பு மற்றும் அபிவிருத்திச் சபை (ரூ. 24,140 இலட்சம்) போன்றவற்றிற்கு மூலதன மாற்றல்களில் முன்னுரிமை வழங்கப்பட்டது.

அரசின் கடன் வழங்கல் வாயிலாக திரட்டப்பட்ட நிதியங்களிலிருந்து அரச கூட்டுத்தபானங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான மூலதனச் செலவு ரூ. 83,350 இலட்சமாக விளங்கியது. இது 1996 இன் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் 54 சதவீதத்தை மட்டுமே கொண்டிருந்தது. இக் குறைப்பானது துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டத்தில் துறைமுக மேலாண்மைச் சபையின் ரூ. 23,550 இலட்சம் கொண்ட பெரும் அளவிலான மூலதன சேமிப்புக்களினதும், இலங்கை ரெலிக் கொம் (ரூ. 9,470 இலட்சம்) இலங்கை மின்சபை (ரூ. 18,370 இலட்சம்) ரூ. 42,540 இலட்சத்தைக்கொண்ட ஏனைய தொழில் முயற்சிகள் ஆகியவற்றினால் மூலதனம் குறைந்த அளவில் பயன்படுத்தப் பட்டமையினதும் இணைந்த விளைவாகும். ஜய கொள்கலன் இறங்குதுறை நிலை III மற்றும் IV கிற்காக துறைமுக அபிவிருத்திச் மேலாண்மைச் சபைக்கு ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட வழங்கல்கள் ரூ. 51,000 இலட்சமாகக் காணப்பட்ட போதிலும் இவ்விரு திட்டங்களும் ரூ. 27,450 இலட்சம் செலவில் நிறைவு செய்யப்பட்டதுடன். மூலதன வரவு செலவுத்திட்டத்தில் ரூ. 23,550 இலட்சம் சேகரிக்கப்பட்டது. இச் சேமிப்புக்கு இரு செயல்திட்டங்களுக்காகவும் சருவதேச சந்தையிலான போட்டி விலைகளில் பொறி மற்றும் கருவியை பெருமளவு கொள்வனவு செய்தமையே காரணமாகும். அதே வேளையில் இலங்கை மின்சபை, சிறிலங்கா ரெலிக்கொம் மற்றும் ஏனைய நிறுவனங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பாதித்த நிருவாக நடை முறைகள் மற்றும் சுற்றாடல் விடயங்களில் ஏற்பட்ட தாமதங்களே 1996 இல் மூலவளங்கள் குறைவாக பயன்படுத்தப்பட்டமைக்கு பொறுப்பாகும்.

தொழிற்பாட்டுப்பகுப்பின் நியதிகளின்படி 1996 இல் பொருளாதார பணிகளிலான அரச முதலீடு 4 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்துரூ. 345,190 இலட்சமாக விளங்கியபோதிலும் மொத்த அரச முதலீட்டில் 71 சதவீதத்திற்கு வகை கூறியது. ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டில் இது 68 சதவீதமாக காணபபட்டது. போக்கு வரத்து மற்றும் தொடர்பூட்டல் துறையானது ரூ. 148,980 இலட்சத் திற்கு அல்லது பொருளாதார பணிகள் தொடர்பிலான மொத்தச் செலவினத்தில் 43 சதவீதத்திற்கு வகைகூறியது. இதில் வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபை (ரூ. 44,040 இலட்சம்) துறைமுக மேலாண் மைச்சபை (ரூ. 27,760 இலட்சம்) சிறிலங்கா ரெலிக்கொம் (ரூ. 24,060 இலட்சம்) ஆகியன ரூ. 95,860 இலட்சத்திற்கு அல்லது போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் மீதான மொத்தச் செலவின் 64 சதவீதத்திற்கு

அட்டவணை **8.4**

செலவின் தொழிற்பாட்டுப் பகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1996 தற்காலிகம் | 1996 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச்செலவினம்** | | | | | | | |
| **அரசபொதுப் பணிகள்** | **24,453** | **27,564** | **30,444** | **47,888** | **48,400** | **53,168** | **54,955** |
| சிவில் நிர்வாகம் | 7,099 | 7,405 | 4,637 | 6,562 | 16,202 | 10,207 | 13,431 |
| பாதுகாப்பு | 12,876 | 15,413 | 19,415 | 35,186 | 25,180 | 37,370 | 33,528 |
| பொது ஒழுங்கும், பாதுகாப்பும் | 4,478 | 4,746 | 6,392 | 6,140 | 7,018 | 5,591 | 7,997 |
| **சமூகப்பணிகள்** | **32,700** | **37,476** | **47,656** | **57,648** | **63,194** | **59,294** | **58,740** |
| கல்வி | 10,533 | 11,225 | 14,836 | 15,784 | 13,231 | 16,018 | 13,407 |
| சுதாதாரம் | 4,518 | 5,711 | 7,666 | 8,818 | 10,566 | 9,260 | 12,054 |
| நலன்புரி | 17,378 | 20,255 | 24,560 | 32,106 | 38,550 | 32,824 | 31,824 |
| வீடமைப்பு | - | - | - | - | - | - | - |
| சனசமூகப்பணிகள் | 271 | 285 | 593 | 941 | 847 | 1,191 | 1,455 |
| **பொருளாதாரப்பணிகள்** | **3,834** | **4,328** | **6,195** | **8,078** | **8,169** | **8,807** | **8,532** |
| விவசாயமும், நீர்ப்பாசனமும் | 1,398 | 1,483 | 2,506 | 3,826 | 3,448 | 3,894 | 4,175 |
| மீன்பிடி | 68 | 107 | 99 | 105 | 178 | 148 | 199 |
| தயாரிப்பும், சுரங்க அகழ்வும் | 349 | 403 | 351 | 252 | 702 | 282 | 650 |
| வலு மற்றும் நீர்வழங்கல் | 133 | 93 | 518 | 990 | 810 | 590 | 728 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் | 1208 | 1,346 | 2,024 | 2,014 | 1,974 | 2,423 | 1,822 |
| வர்த்தகமும், வாணிபமும் | 232 | 203 | 72 | 172 | 287 | 891 | 241 |
| ஏனைய | 446 | 693 | 625 | 719 | 771 | 580 | 718 |
| **ஏனைய** | **28,652** | **32,920** | **42,789** | **40,546** | **54,918** | **50,231** | **55,703** |
| அதில் வட்டி | 25,940 | 30,203 | 38,031 | 38,687 | 44,057 | 46,021 | 49,800 |
| **குறைச்செலவுக்கான ஒதுக்கீடு** | - | - | - | - | **-4,900** | **-872** | - |
| மொத்த நடைமுறைச்செலவு | 89,639 | 102,288 | 127,084 | 154,159 | 169,781 | 170,629 | 177,930 |
| **மூலதனச் செலவினமும், கடன்வழங்கலும்** | | | | | | | |
| **அரசபொதுப் பணிகள்** | **1,970** | **4,085** | **2,390** | **5,776** | **4,335** | **2,827** | **3,810** |
| சிவில் நிர்வாகம் | 1,256 | 3,463 | 1,753 | 3,962 | 3,226 | 1,602 | 3,810 |
| பொது ஒழுங்கும், பாதுகாப்பும் | 714 | 622 | 637 | 1,814 | 1,109 | 1,226 | - |
| **சமூகப்பணிகள்** | **6,136** | **6.075** | **7,677** | **9,854** | **12,363** | **11,185** | 13,676 |
| கல்வி | 2,008 | 2,845 | 2,877 | 3,124 | 4,418 | 4,384 | **4,552** |
| சுதாதாரம் | 2,023 | 1,353 | 1,519 | 2,134 | 3,661 | 2,768 | 3,985 |
| நலன்புரி | 1,191 | 1,084 | 1,681 | 1,690 | 1,256 | 1,606 | 1,852 |
| வீடமைப்பு | 767 | 604 | 802 | 1,610 | 1,256 | 1,606 | 1,526 |
| சனசமூகப்பணிகள் | 148 | 189 | 798 | 1,297 | 1,882 | 1,359 | 2,786 |
| **பொருளாதாரப்பணிகள்** | **20,444** | **29,600** | **29,304** | **36,106** | **43,170** | **34,519** | 41,808 |
| விவசாயமும், நீர்ப்பாசனமும் | 5,890 | 5,682 | 5,179 | 6,060 | 6,525 | 5,491 | **6,223** |
| அதில் மகாவலி செயற்றிட்டம் | 2,670 | 2,810 | 2,598 | 3,090 | 2,133 | 1,940 | 1,655 |
| மீன்பிடி | 175 | 124 | 368 | 361 | 542 | 3,110 | 525 |
| தயாரிப்பும், சுரங்க அகழ்வும் | 184 | 1,471 | 22 | 250 | 1,019 | 379 | 1,256 |
| வலு மற்றும் நீர்வழங்கல் | 5,527 | 4,728 | 5,518 | 5,003 | 6,914 | 6,035 | 7,949 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் | 4,363 | 10,165 | 14,522 | 18,888 | 19,696 | 14,898 | 18,468 |
| வர்த்தகமும், வாணிபமும் | 365 | 364 | 182 | 20 | 353 | 105 | 321 |
| ஏனைய | 3,940 | 7066 | 3,513 | 5,513 | 8,121 | 7,300 | 7,056 |
| **ஏனைய** | **1,072** | **1,081** | **1,084** | **1,074** | **1,049** | **1,082** | **1,250** |
| **குறைச்செலவுக்கான ஒதுக்கீடு** | - | - | - | - | **-2400** | **-1243** | - |
| **மொத்த மூலதனச்செலவும் கடன்வழங்கலும்** | **29,622** | **40,841** | **40,455** | **52,810** | **58,516** | **48,369** | **60,544** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வகை கூறின. இலங்கை மாகாவலி மேலாண்மைச் சபையின் மூலதனச் செலவு வேளாண்மை மற்றும் நீர்பாசன பணிகள் மீதான மூலதனச் செலவின் 35 சதவீதத்துக்கும் பொருளா தார பணிகள் மீதான மொத்த மூலதனச் செலவின் 7 சதவீதத்துக்கும் வகைகூறியது. அதே வேளையில் சக்தி மற்றும் நீர்வழங்கல்துறையிலான அரச முதலீடு ரூ. 60,350 இலட்சமாக விளங்கி 1996 இன் 21 சதவீதமான அதிகரிப்பைக்காட்டியது. இத்துறையானது பொருளாதார பணிகள் மீதான மொத்த மூலதனச் செலவின் 17 சதவீதத்திற்கு வகைகூறியது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் முதலிடப்பட்ட ரூ. 33,130 இலட்சமும் இலங்கை மின் சபைக்கு (இமிச) கடனாக வழங்கப்பட்ட ரூ. 27,210 இலட்சமும் வலு மற்றும் பணிகள் மீதான மூலதனச் செலவின் ஏறக்குறைய முழுப்பங்கிற்கும் வகை கூறின.

கல்வி, நலம், நலன்புரி, வீடமைப்பு மற்றும் சனசமூகப்பணிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சமூகப்பணிகள் மீதான அரச முதலீடு 14 சதவீதத்தால்அதிகரித்து ரூ. 111,850 இலட்சமாக விளங்கியதுடன் 1996 இல் மொத்த அரச முதலீடு களின் 23 சதவீதத்துக்கு வகை கூறின. கல்வி மீதான ரூ. 43,840 இலட்சம் கொண்ட முதலீடும் நலம்மீதான ரூ. 27.680 இலட்சம் கொண்ட முதலீடும் முறையே 40 சத வீதம்கொண்ட 30 சதவீதம் கொண்ட வீழ்ச்சி களைக் காட்டின. இவ்வதிகரிப்புக்கள் கல்வித் துறையில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான விடுதிகளை அமைப்பது தொடர்பானதும் நலத்துறையில் கருவிகளை பெறுதல் மூலதனச் சொத்துக்களை விருத்தி செய்தல் போன்ற நோயாளர்பராமரிப்பு பணிகள் மீதுமான அதிகரித்த செலவினாலுமே பெருமளவுக்கு ஏற்பட்ட தாகும். அதே வேளையில் சிறப்பு நலன்புரி பணிகள் மீதான செலவு 37 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமைக்கு ,1996 இல் நடைமுறையில் இருந்த நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களின் ஒருங்கி ணைப்பு மற்றும் இலக்கிடல் ஆகியவையே பெருமளவு காரணமாயிருந்தன. பொது அரச பணிகளிலான மூலதன முதலீடு ரூ.28,270 இலட்சமாக விளங்கி 1996 இல் 51 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஒன்றை பதிவு செய்தமைக்கு சிவில் நிருவாகத்துறையில் முன்னுரிமை அற்ற மூலதனச் செலவினை கட்டுப் படுத்துவதற்காக கடுமையான வழிமுறைகள் மேற் கொள்ளப்பட்டமையே முக்கிய காரணமாகும். இதன் விளைவாக பொது நிருவாகத்திலான மொத்த மூலதன முதலீடு 1995 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியினது 0.9 சதவீதத்திலிருந்து 1996 இல் 0.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## 8.5 மாகாணசபை

1987 இன் 42ஆம் இலக்க மாகாணசபைகள் சட்டத்தினால் அரசியல் அமைப்பில் ஏற்படுத் தப்பட்ட 13வது திருத்தத்தின் கீழ் நிறுவப்பட்ட மாகாண சபைமுறையின் முக்கிய குறிக் கோளானது இச் சபைகளுக்கு நிருவாக ரீதியான அதிகாரங்களை ஒப்படைப்பதன் மூலமாக தீர்மானம் எடுக்கும் செயல்முறையை பன்முகப் படுத்துவதே ஆகும். அவற்றினது தொழிற்பாட்டுச் செலவினங்களை ஈடுசெய்வதற்கு போதுமான அளவு வருமானங்களை பெற்றக்கொள்வதற்கு மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதாமையினால் மாகாண சபைகள் மட்டத்தில் ஒப்படைக்கப்பட்ட குறிப்பிட்ட சில நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு நிதிகளை ஒதுக்கீடு செய்கின்றது. இந் நிதிகள் மொத்தமான கொடைகளாக வழங்கப்பட்ட வேளையில் மாத்திக் கொடுக்கப்பட்ட மூலதனத்தன்மை கொண்ட நடவடிக்கைகளுக்கு மத்திய அரசினால் தேர்வுகள் அடிப்படையில் கொடைகளூடாக நிதியிடப் பட்டது.

உற்பத்தி மற்றும் நுகர்வு முத்திரைத்தீர்வை, சொத்து வருமானம் விதிப்புக் கட்டணங்களும் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் விற்பனைகள் என்பவற்றின் மீதான விற்பனைகள் வரிகள்மூலம் மாகாண சபைகளினால் மாகாணமட்டத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம் முன்னைய ஆண்டின் ரூ. 44,400 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1996 இல் 10 சதவீதத்தினால் ரூ. 48,840 இலட்சத்துக்கு அதிகரித்தது. மொத்த மற்றும் சில்லறை வியா பாரிகள் மீதான புரள்வு வரிகள், உரிமக் கட்டணங்கள் மற்றும் ஏனைய வரிகளை உள்ளடக்கிய மற்றும் நுகர்வு மீதான வரிகளி லிருந்தான வருமானச் சேகரிப்பு ரூ. 34,160 இலட்சமாக விளங்கி மொத்த வருமான சேகரிப்பில் 70 சதவீதத்திற்கு வகை கூறியதுடன் முன்னைய ஆண்டிலும் பார்க்க 7 சதவீத

அட்டவணை 8.5
மாகாண சபைகளுக்கான வரவு செலவுத்திட்ட தொழிற்பாடு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1995 | 1996 (அ) |
|---|---|---|
| **1. மொத்த அரசிறை** | **4,440.3** | **4,884.4** |
| 1.1 உற்பத்தி மற்றும் செலவினம் மீதானவரி | 3,180.8 | 3,416.3 |
| புரள்வு வரிகள் | 2,335.2 | 2,463.8 |
| உரிமக் கட்டணங்கள் | 839.8 | 946.2 |
| ஏனைய வரிகள் | 5.8 | 6.3 |
| 1.2இலாபங்களும்,பங்கிலாபங்களும் | 68.2 | 67.1 |
| 1.3விற்பனைகளும், கட்டணங்களும் | 317.0 | 355.4 |
| 1.4 முத்திரைத் தீர்வை | 867.1 | 1,036.0 |
| 1.5 ஏனைய | 7.2 | 9.6 |
| **2. மொத்தச் செலவினம்** | **20,852.6** | **22,128.1** |
| 2.1 நடைமுறைச்செலவினம் | 19,795.3 | 20,941.3 |
| தொழிற்பாட்டுஅடிப்படையில | 19,795.3 | 20,941.3 |
| மாகாண நிர்வாகம் | 2066.9 | 1,941.9 |
| பொருளாதாரப் பணிகள் | 755.1 | 833.8 |
| சமூகப்பணிகள் | 16,973.3 | 18,165.6 |
| பொருளாதார அடிப்படையில் | 19,795.3 | 20,941.3 |
| தனியார் ஊதியங்கள் | 16,030.6 | 16,262.6 |
| ஏனைய | 3,764.6 | 4,678.7 |
| 2.2 மூலதனச் செலவினம் | 1,057.3 | 1,186.8 |
| மூலதனப்பொருட்களின் கையேற்பு | 593.7 | 756.6 |
| மூலதன மாற்றல்கள் | 66.4 | 52.9 |
| ஏனைய | 397.2 | 377.3 |
| **3. நிதியிடல்** | **15,288.0** | **16,872.7** |
| 3.1 மொத்தக் கொடைகள் | 14,065.9 | 15,830.6 |
| 3.2 தேர்வு அடிப்படையிலான கொடைகள் | 897.1 | 800.0 |
| 3.3 குறைநிரப்புக் கொடைகள் | 325.0 | 242.1 |

அ. தற்காலிகம் மூலங்கள்: கூட்டுறவு, மாகாண சபைகள் மற்றும் சுதேச வைத்திய அமைச்சு இலங்கை மத்திய வங்கி

அதிகரிப்பொன்றினையும் காட்டியது. மொத்த மற்றும் சில்லறை வியாபாரங்கள் மீதான புரள்வு வரி 1996 இன் 6 சதவீத அதிகரிப்பு ஒன்றினை பதிவு செய்து ரூ. 24,640 இலட்சத்தை அடைந்தது. பெருமளவு மொத்த மற்றும் சில்லறை வியாபாரங்களின் மீது 1 சதவீதம் கொண்ட புரள்வு வரி விதிக்கப்பட்ட வேளையில் மரம் மற்றும் தளபாடம் ஆகிய சில குறிப்பிட்ட வியாபா ரங்கள் 5 சதவீதம் கொண்ட புரள்வு ஊடான வருமானச் சேகரிப்பு முன்னைய ஆண்டின் ரூ. 8,400 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 9,460 இலட்சத்துக்கு அதிகரித்து 13 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. ஊர்தி உரிமங்கள் மற்றும் வெறியக் குடிவகை விற்பனை நிலையங்களுக்கான உரிமங்கள் என்பனவற்றின் வழங்கலே இவ்வகையின் வருவாய்க ளுக்கான முக்கிய மூலமாக விளங்கியது.

1996 இல் சேகரிக்கப்பட்ட முத்திரைத்தீர்வை ரூ. 10,360 இலட்சமாக விளங்கி 19 சதவீத அதிகரிப்பு ஒன்றினைக் காட்டியது. அதே வேளை மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் நீதி மன்றங்களினால் விதிக்கப்படும் அபராதங்கள் மற்றும் கட்டணங்களும் விதிப்புக்கட்டணங்களும் என்பனவற்றை முக்கியமாக உள்ளடக்கிய விற்பனைகளும் விதிப்புக்கட்டணங்களும் 1996 இல் 12 சதவீதம் கொண்ட அதிகரிப்பு ஒன்றினை பதிவு செய்து ரூ. 3,550 இலட்சத்தினை அடைந்தன.

மாகாண சபைகளின் வருமான செயலாற்றத்தின் அடிப்படையில் 1996 இல் மேல்மாகாண சபையினால் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூ. 32,320 இலட்சமாக விளங்கி மாகாண சபைகளினால் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானத்தில் 66 சதவீதத்திற்கு வகை கூறிய வேளையில் மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணசபைகள் ஒவ்வொன்றும் மொத்த வருமானத்தில் கிட்டத்தட்ட 8 சதவீதத்திற்கு வகை கூறின. உண்மையிலேயே 1996 இல் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானத்தில் கிட்டத்தட்ட 90 சதவீதத்தினை இங்கு 4 சபைகளினது வருமானம் கொண்டிருந்தது.

மாகாண சபைகளின் மொத்த நடைமுறைச் செலவு 1996 இல் 6 சதவீத அதிகரிப்பு ஒன்றினை பதிவு செய்து ரூ. 209,410 இலட்சத்தினை அடைந்தது. மொத்த நடைமுறைச் செலவினத்தில் 78 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்திய தனியாள் ஊதியங்கள் 1996 இல் ரூ. 162,630 இலட்சத்தினை எட்டியது. தொழிற்பாட்டு அடிப்படையில் மொத்த தனியாள் ஊதியங்களின் கொடுப்பனவானது கல்வி (ரூ. 116,340 இலட்சம்) சுகாதாரம் (ரூ. 28,500 இலட்சம்) மற்றும் பிரதேச மட்டத்திலான நிருவாகம் ( ரூ. 5,480 இலட்சம்) என்பன 1996 இல் மொத்தத் தனியாள் ஊதியங்களின் 92 சதவீதத்திற்கு வகை கூறியதாக காட்டியது. அதே வேளை கல்வி (ரூ. 119,480 இலட்சம்) சுகாதாரம் (ரூ. 35,620 இலட்சம்) உள்ளூராட்சி (ரூ. 16,140 இலட்சம்) சமூக சேவைகள் (ரூ. 6,390 இலட்சம்) மற்றும் பிரதேச மட்டத்திலான

நிருவாகம் (ரூ. 6,620 இலட்சம்) என்பனவற்றின் மீதான மொத்தச் செலவினம் 1996 இன் மொத்த நடைமுறைச் செலவினத்தில் 88 சதவீதத்தைக் கொண்டிருந்தது. செலவின் தொழிற்பாட்டு பகுப்பாய்வு நியதிகளின்படி 1996 இல் சமூக சேவைகள் ரூ. 181,660 இலட்சமாக விளங்கி மொத்த நடைமுறைச் செலவினத்தில் 87 சதவீதத் திற்கு வகை கூறியது. இதனைத் தொடர்ந்து பொருளாதார பணிகள் ரூ. 8,340 இலட்சமாகவும் பிரதேச நிருவாகம் ரூ. 19,420 இலட்சமாகவும் விளங்கி 1996 இல் மொத்த நடைமுறைச் செலவினத்தின் முறையே 4 சதவீதத்தினையும், 9 சதவீதத் தினையும் கொண்டிருந்தன. ஒப்பீட்டு அளவில் 1995 இல் இத்துறைகளின் பங்குகள் முறையே 86 சதவீதம், 4 சதவீதம் மற்றும் 10 சதவீதமாக காணப்பட்டன.

மாகாணசபைகளுக்கிடையேயான வருமானப் பரம்பல் மாதிரிக்கு மாறாக நடைமுறைச் செலவினத்தின் பரம்பலானது மிகவும் ஒருமித்த நன்மை கொண்டதாக காணப்பட்டது. மேல் மாகாணச் சபையின் நடைமுறைச் செலவினம் ரூ. 49,940 இலட்சமாக விளங்கி மொத்த நடைமுறைச் செலவினத்தில் 24 சதவீதத்திற்கு வகை கூறிய போதிலும் ஏனைய அனைத்து மாகாண சபைக ளினதும் பங்குகள் 1996 இல் 7-14 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன.

மூலதனச் செலவினம் 1996 இல் ரூ. 11,870 இலட்சமாக விளங்கி 1995 இல் பதிவு செய்யப்பட்ட ரூ. 10,570 இலட்சத்திற்கும் மேலாகி 12 சதவீத அதிகரிப்பொன்றைக்காட்டியது. பொறி, கட்டட வாக்கம் மற்றும் நிலம் மேம்படுத்தல் என்பனவற்றின் மீதான செலவினம் 1996 இல் ரூ. 7,570 இலட்சமாக அமைந்து மொத்த மூலதனச் செலவில் 64 சதவீதத்துக்கு வகை கூறியதுடன் முன்னைய ஆண்டின் ரூ. 5,940 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 27 சதவீதம் கொண்ட அதிகரிப்பு ஒன்றினையும் எடுத்துக்காட்டியது. அத்துடன் சம்பந்தபட்ட மத்திய அமைச்சுக்களிடம் இருந்து மூலதனச் செலவுடன் செலவுபட்ட வேலைகளை மாகாணசபைகள் பொறுப் பேற்றுக் கொண்டதுடன் அவசியமான நிதியியல் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன.

மாகாண சபைகளின் தொழிற்பாடுகள் ரூ. 153,550 இலட்சம் கொண்ட இழப்பொன்றுடன் ஒப்பிடுகையில் 1996 இல் ரூ. 160,570 இலட்சம் கொண்ட இழப்பொன்றை உருவாக்கின. திரண்ட பற்றாக்ககுறை 1995 இன் ரூ. 164,120 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1996 இல் ரூ. 172, 440 இலட்சமாக காணப்பட்டன. இத்தொழிற்பாட்டு இழப்புக்களை நிதியிடுவதற்காக மத்திய அரசினால் வழங்கப்பட்ட மொத்தத் தொகை அடிப்படையில் அமைந்த கொடைகள் முன்னைய ஆண்டின் ரூ. 140,660 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1996 இல் ரூ. 158,310 இலட்சத்தை எட்டின. அதே வேளை மூலதனச் செலவுகளுக்காக மத்திய அரசினால் வழங்கப்பட்ட தேர்வு அடிப்படையில் அமைந்த கொடைகள் 1996 இல் ரூ. 8,000 இலட்சமாக அமைந்து காணப் பட்டது. 1995 இல் இக் கொடைகள் ரூ. 8,970 இலட்சமாக உயர்ந்து காணப்பட்டன. மூலதனச் செலவினத் திற்காக எஞ்சிய நிதித்தொகைத் தேவைப்பாடுகள் மத்திய அரசினால் பற்றாக்குறைகளை ஈடு செய்வதற் காக கொடையாக அளிக்கப்பட்டன.

## 8.6 அரச தொழில் முயற்சி சீரமைப்புக்கள்

1996 இன் 1 ஆம் இலக்க இலங்கை அரச தொழில் முயற்சிகள் சீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் அரச தொழில் முயற்சிகள் சீரமைப்புக் குழு நிறுவப்பட்டது. பொருளாதார அபிவிருத்தியை சீராகப் பேணல் மற்றும் துரிதப் படுத்தல் என்பனவற்றை நோக்கமாகக் கொண்டு அரச தொழில் முயற்சிகளின் சீரமைப்புத் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை கூறுதலும் உதவி அளித்தலும் சருவதேச சந்தைகளை சென்றடையும் விதத்தில் பொருட்களினதும் பணிகளினதும் தரத்தை உயர்த்துதல், புதிய தொழில் நுட்பம் மற்றும் நிபுணத்துவம் என்பனவற்றை பெறறக் கொள்ள மூலதனச்சந்தையை அபிவிருத்தி செய்து பரவலாக்குதலும் நீண்ட கால தனியார் சேமிப்புக் களை திரட்டலும், தனியார் துறையை ஊக்குவித்தல் மற்றும் அரசின் சமூகம் சார் விடயங்களை சிறந்த முறையில் அணுக இயலச் செய்யும் பொருட்டு அரசின் வருமானத்தை அதிகரித்தல் என்பனவே இவ் ஆணைக்குழுவின் முக்கிய கடமைகளாகும்.

அரச தொழில்முயற்சிகள் சீரமைப்பு

## அட்டவணை 8.6
### ஈட்டுக்கொள்ளப்பட்ட தனியார் மயமாக்கப்பட்ட பெறுகைகள்

| தொழில் முயற்சியின் பெயர் | பெரும்பான்மைப் பங்குகளின் விற்பனை | | | பொதுப்பங்கு வழங்கல் | | ஈட்டுகொள் ளப் பட்ட மொத்தத் தொகை ரூ. பத்து இலட்சம் |
|---|---|---|---|---|---|---|
| | % அகற்றல் | உள்நாட்டு ரூ. பத்து இலட்சம் | வெளிநாட்டு ரூ. பத்து இலட்சம் | % அகற்றல் | ஈட்டுக்கொள்ளப் பட்ட தொகை ரூ. பத்து இலட்சம் | |
| பெருந்தோட்டக் கம்பனிகள் | | | | | | |
| வரையறுக்கப்பட்ட வட்டவளை பெருந்தோட்டம் (ஆ) | 51 | 295.40 | - | - | - | 295.40 |
| வரையறுக்கப்பட்ட ஹொரணை பெருந்தோட்டம் (ஆ) | 51 | 86.80 | - | - | - | 86.80 |
| வரையறுக்கப்பட்ட மஸ்கெலிய பெருந்தோட்டம் | 51 | 219.30 | - | - | - | 219.30 |
| வரையறுக்கப்பட்ட மடுல்சீமா பெருந்தோட்டம் | 51 | 102.00 | - | - | - | 102.00 |
| வரையறுக்கப்பட்ட அக்கரப்பத்தன பெருந்தோட்டம் | 51 | 267.87 | | | | 267.87 |
| வரையறுக்கப்பட்ட அடுகஸ்தன்ன பெருந்தோட்டம் | 51 | 242.25 | | | | 242.25 |
| வரையறுக்கப்பட்ட பலாங்கொட பெருந்தோட்டம் | 51 | 420.75 | - | - | - | 420.75 |
| வரையறுக்கப்பட்ட உடபுசல்லாப பெருந்தோட்டம் | 51 | 316.14 | - | - | - | 316.14 |
| ஏனைய தொழில்முயற்சிகள் | | | | | | |
| வரையறுக்கப்பட்ட ஒரியன்ட்ட லங்கா | 90 | - | 1,000.00 | - | - | 1,000.00 |
| வரையறுக்கப்பட்ட தேயிலை சிறு உடைமையாளர் தொழிற்சாலைகள் | - | | - | 39 | 64.60 | 64.60 |
| வரையறுக்கப்பட்டரஜரட்ட அக்ரோ வேட்டிலய்சர் கம்பனி | 90 | 60.05 | - | - | - | 60.05 |
| வரையறுக்கப்பட்ட லங்கா லுப்ரிகன்ட் | - | - | - | 39 | 547.24 | 547.24 |
| இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம் | 90 | - | 849.45 | - | - | 849.45 |
| மொத்தம் | | 2,010.56 | 1,849.45 | - | 611.84 | 4,471.85 |

மூலம்:அரசதொழில் முயற்சி சீர்திருத்த ஆணைக்குழு

அ. கொழும்பு பங்குபரிவர்த்தனைக்கான தரகுக் கொடுப்பனவு மற்றும் ஏனைய பணிக்கட்டணங்கள்என்பவற்றின் செலுத்தலின் பின்னா உடமையகற்றல் பெறுகைகளின் தேறிய பெறுகைகளை அரசக்கணக்குகள் காட்டுகின்றன.

ஆ. 1995இல் முற்பணக்கொடுப்பனவு ஒன்று பெறப்பட்டதும் 1996இல் நிலுவைப் பெறப்பட்டதுமான கம்பனிகள் பின்வருமாறு
- வரையறுக்கப்பட்ட வட்டவளை பெருந்தோட்டம் ரூ. 106 இலட்சம்
- வரையறுக்கப்பட்ட ஹொரணை பெருந்தோட்டம் ரூ. 152 இலட்சம்

நிகழ்ச்சித்திட்டம் 1996 இல் தனியார் மயமாக்கல் மீதான பணப்பெறுகைகளாக ரூ. 46,610 இலட்சத்தினை உருவாக்கியது. வரையறுக்கப்பட்ட ஒறியன்ட் லங்காவின் 60 சதவீத பங்குகளின் உரிமை மாற்றம் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை உருக்கு கூட்டுத்தாபனத்தின் 90 சதவீத பங்குகளின் உரிமை மாற்றம் என்பன முறையே ரூ. 10,000 இலட்சத்தினையும் ரூ. 8,490 இலட்சத்தினையும் தோற்றுவித்தன. இவ்விரு தொழில் முயற்சிகளுக்குமான தனியார் மயமாக்கல் பணப்பெறுகைகள் முழுவதும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்டது.

பெருந்தோட்டக் கைத்தொழில் துறையில் வரையறுக்கப்பட்ட மஸ்கெலியா பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட மடுல் சீமை பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட பலாங்கொடை பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட அக்பரைப்பத்தன பிளான்டேசன் வரையறுக்கப்பட்ட கப்புகஸ்தன்ன பிளான்டேசன், மற்றும் வரையறுக்கப்பட்ட உடப்புசல்லாவ பிளான்டேசன், ஆகிய ஆறு பெருந்தோட்டக் கம்பனிகளும் 1996 இல் தனியார் மயமாக்கப்பட்டதுடன் 51 சதவீதமான பெரும் பான்மை பங்குடைமை உரிமை மாற்றப் பட்டு அரசுக்கான வருமானமாக ரூ. 15,680 இலட்சம் வசூலிக்கப்பட்டது. வரைய றுக்கப்பட்ட வட்டவள பிளான்டேசன், மற்றும் வரையறுக்கப்பட்ட கொறன பிளான்டேசன், என்பன வற்றின் 51 சதவீதமான பெரும்பான்மை பங்குகளின் உரிமை மாற்றத்தினால் முன்னைய ஆண்டில் பெறப்பட்ட ரூ. 260 இலட்சம் கொண்ட முற்பணக் கொடுப்பனவுகளுக்கும் மேலாக 1996 இல் ரூ. 3,820 இலட்சம் பெறப்பட்டது. வரையறுக் கப்பட்ட அகலவத்தை பிளான்டேசன், மற்றும்

அட்டவணை **8.7**
தோல்வியடைந்த தனியார் மயப்படுத்தப்பட்ட அரசதொழில் முயற்சிகள்

| நிலைமை | வரையறுக்கப் பட்ட கொழும்பு கொமர்ஷல் பேட்டிலய்சர் | வரையறுக் கப்பட்ட கந்தளாய் சீனிக் கைத்தொழில் | வரையறுக் கப்பட்ட இங்குராண சீனிக் கைத்தொழில் | வரையறுக் கப்பட்ட காட்டகா கிரவைட் லங்கா | வரையறுக் கப்பட்ட லங்கா லோக ஆட்வேயார் | வரையறுக் கப்பட்ட மத்தேகம புடவை ஆலைகள் |
|---|---|---|---|---|---|---|
| விற்பனை செய்யப்பட்ட பங்குகளின் சதவீதம் | 90 | 90 | 90 | 90 | 90 | 90 |
| ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பங்குகளின் சதவீதம் | 10 | - | 10 | 10 | 10 | 10I |
| தொழிற்பாடு நிறுத்தப்பட்ட மாதம் | திசெ.1994 | யூலை1994 | நவெ.1996 | நவெ.1994 | மே.1996 | யூன்.1996 |
| பாதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | 330 | 500 (தொழிலிலமர்த்தப்படலாம்) | 1,290 | 700 | 300 | 1,002 |
| செலுத்தப்படாத கூலிகள் ஊ.சே.நி. ஊ.ந.நி ஆகியன | திசெ.94 இலிருந்து முழுமையாக | யூலை94 இலிருந்து முழுமையாக | ரூபா 471 இலட்சம் | திசெ.94 இலிருந்து முழுமையாக | திசெ.94 இலிருந்து முழுமையாக | ரூபா 105 இலட்சம் |

மூலம்: பொதுத்திறைசேரி

வரையறுக் கப்பட்ட களனி வெளி பிளான்டேசன், என்பன வற்றின் 51 சதவீத பெரும்பான்மை பங்குடமை விற்பனை வருமானங்கள் மற்றும் பொதுமக்க ளுக்கான 20 சதவீத வழங்கல் என்பனவற்றின் ஒரு பகுதி 1996 இலும் பெறப்பட்டு ரூ. 1,230 இலட்சத்தினை அடைந்தன. மேல் குறிப் பிடப்பட்ட 10 பெருந்தோட்டக் கம்பனிகளிலிருந்து பெறப்பட்ட மொத்த தனியார் மயமாக்கல் பணப்பெறுகைகள் ரூ. 21,110 இலட்சத்தினை அடைந்து 1996 இல் தனியார் மயமாக்கல் மூலமான பணப்பெறுகை களில் 45 சதவீதத்திற்கு வகை கூறின.

வரையறுக்கப்பட்ட லங்கா லுப்ரிகன்டஸ் மற்றும் வரையறுக்கப்பட்ட தேயிலை சிறு உடமை யாளர் தொழிற்சாலைகள் போன்ற ஒவ்வொரு நிறுவனத்தினாலும் 39 சதவீதமான பங்குகள் 1996 இல் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டதுடன் இவ்விரு தொழில் முயற்சிகளாலும் 51 சதவீத பெரும்பான்மை பங்குடமையை உரிமைமாற்றம் செய்வதற்கான செயல்முறை 1994 இல் தொடங்கிய போது சேகரிக்கப்பட்ட ரூ. 3,180 இலட்சத்துக்கும் மேலாக 1996 இன் உரிமைமாற்றத்தின் மூலமான பணப்பெறுகைகள் ரூ. 6,120 இலட்சத்தினை அடைந்தன.

வரையறுக்கப்பட்ட ரஜரட்ட அக்றோபெரி லைசர் கம்பனியின் 90 சதவிதமான பங்குகள் உரிமைமாற்றம் செய்யப்பட்டு ரூ. 600 இலட்சம் சேகரிக்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட லங்கா பிளைவூட் புறடக்ஸ், வரையறுக்கப்பட்ட றுகுனு அக்றோ பெர்டிலைசர் கம்பனி மற்றும் வரையறுக் கப்பட்ட வயம்பா அக்றோ பெர்ட்டிலைசர் என்பன வற்றின் உரிமை மாற்றல்களிலான பணப்பெறு கைகள் முறையே 1993, 1994 மற்றம் 1995 இலிருந்து தவணை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட துடன் இவற்றிலிருந்தான உரிமை மாற்றல் பணப் பெறுகைகள் 1996 இல் ரூ. 180 இலட்சமாக அமைந்து காணப்பட்டது.

தனியார் மயமாக்கப்பட்ட அரச தொழில் முயற்சிகளின் பங்குகளை அத்தகைய தொழில் முயற்சிகளிலுள்ள ஊழியர்களுக்கு உடமை மாற்றம் செய்ததும் 1996 இல் மேற்கொள்ளப்பட்டது. வரையறுக்கப்பட்ட கெப்பிடல் டெவலப்மென்ற் அன்ட் இன்வெஸ்மன்ட் கம்பனியின் 1.1 சதவீத பங்குகளும் வரையறுக்கப்பட்ட ஒறியன்ற் லங்காவின் 3 சதவீத பங்குகளும் மற்றும் வரை யறுக்கப்பட்ட செல்கேஸ் லங்கா, வரை யறுக்கப்பட்ட டிஸ்மோல் கோல்டர் பெக்டரீஸ், வரையறுக்கப்பட்ட லங்கா செரமிக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட புத்தளம் சீமெந்ட் கம்பனி ஆகிய ஒவ்வொன்றினதும் 10 சதவீத பங்குகளும் அந்த கம்பனியின் ஊழியர் களுக்கு கொடையாக வழங்கப்பட்டது.

தனியார் மயமாக்கல் கொள்கை விடயத்தில் கடந்த காலத்தில் குறிப்பிட்ட சில அரச தொழில் முயற்சிகளின் தனியார் மயமாக்கலின் போது மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த தந்திரோ பாயங்களின் காரணமாக எழுந்த முக்கிய பிரச்சினைக்கு அரசு பரிகாரம் கண்டது. இப்

பிரச்சினைக்கு பரிகாரம் காண்பதற்காக தனியார் மயமாக்கப்பட்ட அரச தொழில் முயற்சிகளை புனரமைப்பதற்கு வசதியளிக்க 1996 இன் 29 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் புனரமைப்புச் சட்டத்தினை அரசு அறிமுகம் செய்தது. சனநாயக சமூகம் ஒன்றின் பொதுவான நலன்புரி தேவைப்பாடுகளை எதிர்கொள்ளுவதற்காகவும் தேசிய பொருளாதாரத்தின் நல உரித்துக்களை பாதுகாக்கவும் அத்தகைய கம்பனிகளின் வேலையாட்களின் தொழில் பாதுகாப்பினையும் மதிப்பினையும் வழங்கும் நோக்கிலும் அத்தகைய கம்பனிகளில் உற்பத்தியினை தரம் உயர்த்து வதற்காகவும் அந்த கம்பனிகளின் தொழில் வாய்ப்பின்மை, ஆட்குறைப்பு மற்றும் சம்பளங்கள் நியதிக் கொடுப்பனவுகள் என்பன செலுத்தப்படாத இடத்து தனியார் பொதுக்கம்பனிகளை புனரமைப்புச் செய்வதற்கு அரசுக்கு பொருத்தமான நடவடிக் கைகளை மேற்கொள்ள சட்டம் அனுமதிக்கின்றது.

அரச தொழில் முயற்சிகள் புனரமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட வேளையில் தோல்வியடைந்த தனியார் மயமாக்கப்பட்ட அரச தொழில் முயற்சிகள் இச் சட்டத்தினால் வரையறுக்கப்பட்டவாறு புனரமைப்பை வேண்டி நிற்கின்றன. வரையறுக்கப்பட்ட கொழும்பு கமர்சியல் பெர்ட்டிலைசர், வரைய றுக்கப்பட்ட கந்தளாய் சுகர் இன்டஸ்ரீஸ் வரைய றுக்கப்பட்ட இங்கூறான சுகர் இன்டஸ்ரீஸ், வரையறுக்கப்பட்ட கஹட்டகாஹகிராப்பைட் லங்கா, வரையறுக்கப் பட்ட லங்கா லோக காட்வெயர் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட மத்தேகம ரெக்ஸ்ரைல்ஸ் மில்ஸ் என்பவை அத்தொழில் முயற்சிகளாகும். தனியார் மயமாக்கல் செயன் முறையின் போதும் இவ் ஆறு அரச தொழில் முயற்சிகள் ஒவ்வொன்றினாலும் 90 சதவீதமான பங்குகள் உரிமை மாற்றம் செய்யப்பட்டன. இக் கம்பனிகள் அனைத்தும் 1996 யூன் அளவில் வர்த்தக தொழிற்பாடுகளில் ஈடுபட்டிருக்கவில்லை.

அரசினால் கடந்த காலத்தில் வழங்கப்பட்ட கடன்களிலிருந்தான மீள் பெறுகைகள் ரூ. 34,730 இலட்சத்தை எட்டியதுடன் இவற்றுள் ரூ. 15,780 இலட்சம் இலங்கை மின்சாரசபையினால் செலுத்தப்பட்டதாகும். இரு அரச வங்கிகளினாலும் அவற்றின் மீள் அமைப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக வைத்திருக்கப்படும் அரச முறிகள் மீதான ஆண்டு வட்டிக்கொடுப்பனவுகள் 28,910 இலட்சத்தை அடைந்தன. மக்கள் வங்கி, இலங்கை வங்கி, மற்றும் தேசியசேமிப்பு வங்கி என்பனவற்றிற்கு முறையே ரூ. 100,560 இலட்சம், ரூ. 93,360 இலட்சம், ரூ. 44,800 இலட்சம் பெறுமானம் கொண்ட அரச முறிகள் 1996 இல் வழங்கப்பட்டன.

## 8.7 வரவுசெலவுத்திட்ட பற்றாக் குறையை நிதியிடல்

1996 இல் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை (கொடைகளின் பின்னர்) ரூ. 599,320 இலட்சமாக அமைந்து காணப்பட்டது. பற்றாக்குறையினை நிதியிடுவதற்காக கிடைக்கத்தக்கதாக இருந்த மொத்த வெளிநாட்டுக் கடன்பாடுகள் 28 சதவீதத்தினால் குறைவடைந்து ரூ. 214,020 இலட்சத்தை அடைந்தது. 1996 இல் வெளிநாட்டுக் கடன்களின் மீள் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பொன்றின் காரணமாக தேறிய வெளிநாட்டுக் கடன்பாடுகள் ரூ. 109,110 இலட்சத்தை அடைந்து பாரிய வீழ்ச்சி ஒன்றை எடுத்துக்காட்டின. மொத்த வெளிநாட்டுக் கடன்பாடுகளின் பகிர்ந்தளிப்புக்கள் 1996 இன் திட்டமிடப்பட்ட தொகையிலும் 24 சதவீதம் தாழ்வடைந்து காணப்பட்டது. வலு, வீதி அபிவிருத்தி, தொலைத்தொடர்பூட்டல் மற்றும் நீர் வழங்கல் ஆகிய செயற்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலில் ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் செலவுகளைச் திருப்பிச் செலுத்தும் அடிப்படையிலமைந்த வெளிநாடுகளுடனான செயல்திட்டங்களை நடை முறைப்படுத்துவதற்கான உள்நாட்டு மூலவளங்களின் கட்டுப்பாடு என்பனவே வெளிநாட்டு மூலவளங்களின் குறைந்த பயன்பாட்டுக்கான முக்கிய காரணங்களாகும். குறிப்பாக யப்பானிய யென்னுக்கு எதிராக உள்நாட்டு நாணயத்தில் ஏற்பட்ட பெறுமான வளர்ச்சியானது (1996 இல் யப்பானிய யென்னுக்கு எதிராக ரூபா 7 சதவீதம் பெறுமானம் வளர்ச்சியடைந்தது. 1996 இல் மொத்த வெளிநாட்டுக்கடன்பாடுகளின் பகிர்ந்தளிப்பு 35 சதவீதத்திற்கு வகை கூறியது. மொ.உ.உற்பத்தியின் விகிதமாக தேறிய வெளிநாட்டு கடன்பாடுகள் 1995 இன் 3.2 சதவீதத்தில் இருந்து 1996 இல் 1.4 சதவீதத்திற்கு

வீழ்ச்சியடைந்தன. அதே வேளை மொத்த பற்றாக்குறைக்கு நிதியிடலில் (கொடைகளின் பின்னர்) தேறிய வெளிநாட்டுக்கடன்பாடுகளின் பங்கு 1995 இல் 38 சதவீதத்தில் இருந்து 1996 இன் 18 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது.

அரச இறை தொழில்பாடுகளில் ஏற்பட்ட பாரிய மூலவள இடைவெளிகளை பிரதிபலித்து உள்ளூர் மூலங்களிலிருந்தான தேறிய கடன்பாடுகளின் தேவைப்பாடு ரூ. 490,200 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 339,720 இலட்சத்துக்கும் மேலாக 44 சதவீத அதிகரிப்பினை பதிவுசெய்தது. மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக தேறிய உள்ளூர் நிதியிடல் 1996 இல் 6.4 சதவீதமாக இருந்த வேளையில் பற்றாக்குறையின் (கொடைகளின் பின்னர்) பங்கொன்றாக அது 82 சதவீதத்தில் அமைந்து காணப்பட்டது. உள்நாட்டு மூலங்களிலிருந்தான மொத்த தேறிய கடன்பாடுகள் வங்கிக் கடன்பாடுகளான ரூ. 123,440 இலட்சம் மற்றும் உள்ளூர் மூலங்களுக்கு நிலுவையாக செலுத்தப்பட வேண்டிய ரூ. 27,150 இலட்சத்தை உள்ளடக்கிய வங்கியல்லா கடன்பாடுகளான ரூ. 366,760 இலட்சம் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

பற்றாக்குறையினை நிதியிடுவதற்காக ரூபா கடன்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் ஏனைய கடன்பாடுகள் என்பனவற்றின் வழங்கள் ஊடாக வங்கி அல்லா உள்நாட்டு மூலங்களிலிருந்தான மொத்தக் கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூ. 549,760 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1996 இல் ரூ. 567100 இலட்சமாக விளங்கின. ரூபாக்களின் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடான மொத்தக் கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூபா 467,150 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 467,170 இலட்சமாக அமைந்து காணப்பட்டன. ரூ. 225,670 இலட்சம் கொண்ட மீள்கொடுப்பனவுகளின் காரணமாக ரூபாக்கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடான தேறிய கடன்பாடுகள் 1995 இல் ரூ. 203,860 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 241,740 இலட்சத்தினை அடைந்து 19 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டின. முன்னைய ஆண்டினைப் போன்றே ஊழியர் சேமநிதியம் தொடர்ந்தும் ரூபா கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்கான முக்கிய உதவுனராக விளங்கியதுடன் 1995 இன் ரூ. 314,200 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் உதவு தொகைகள் ரூ. 376,890 இலட்சமாக அமைந்து காணப்பட்டன. இதேவேளை ரூபாக் கடன்களிலான தேசிய சேமிப்பு வங்கியின் முதலீட்டில் காணப்பட்ட கீழ் நோக்கிய போக்கு தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டிலும் தொடர்ந்தது. தேசிய சேமிப்பு வங்கியின் மொத்த உதவு தொகைகள் 1994 இன் ரூ. 195,950 இலட்சம் மற்றும் 1995 இன் ரூ. 144,290 இலட்சம் என்பனவற்றுடன் ஒப்பிடுகையில் ரூ. 57,900 இலட்ச மாக விளங்கின. ஏனைய வங்கியல்லா மூலதனங் களில் இருந்து ரூபா பிணையங்களின் ஊடாக திரட்டப்பட்ட மூலவளங்கள் முன்னைய ஆண்டின் ரூ. 10,290 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 32,370 இலட்சமாக காணப்பட்டது. 1996 இல் நிருவாக ஏற்பாடுகளின் ஊடாக வசப்படுத்தப்படாத மூலங்களிலிருந்து நிதிகள் கடனாக பெற்றுக் கொள்ளப்பட்டமையே ரூபாக்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடான மொத்த கடன் பெறுகையில் ஏற்பட்ட குறைப்புக்கான முக்கிய காரணமாகும்.

திறைசேரி உண்டியலின் புதிய வழங்கல் களின் ஊடாக திரட்டப்பட்ட மூலவளம் ரூ. 107,410 இலட்சத்தை அடைந்தது. பகிரங்கச் சந்தை தொழிற்பாடுகளின் விளைவாக ஏற்பட்ட அதிகரிப்பு ஒன்றினால் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியலின் உடமை முன்னய ஆண்டின் இறுதியில் ரூ. 125,250 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1996 இறுதியில் ரூ. 171,000 இலட்சத்தை அடைந்ததன் காரணமாக திறைசேரி உண்டியல்களின் உடமை மாற்றமடைந்தது. இரண்டாந்தரச் சந்தை தொழிற்பாடுகளுக்கு சீராக்கங்கள் செய்யப்படும் போது வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் விகிதமாக வங்கித் தொழில் துறையின் திறைசேரி உண்டியல் உடமை 31 சதவீதமாக அமைந்து காணப்பட்டது. அதே வேளை திறைசேரி உண்டியல்களின் ஊடான கடன்பாடு 1996 ஒத்தோபரில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரையறையான ரூ. 1,250,000 இலட்சத்தினை எட்டியது. திறைசேரி உண்டியல் கடன்பாட்டு வரையறை மேல்நோக்கி திருத்தியமைக்கப்படாததனாலும் சந்தை சார்ந்த படுகடன் கருவிகளின் கிடைப்பனவின்மையின் காரணமாகவும் சந்தையிலிருந்து மூலவளங்களை திரட்டுவதில் அரசு கணிசமான இடர்ப்பாடுகளை எதிர் நோக்கியது. இதன் விளைவாக அரச நிதி மற்றும் நிதி அல்லா நிறுவனங்களிடமிருந்தான

**வரைபடம் 8.4**

**பற்றாக்குறை நிதியிடல்**




நிருவாக ஏற்பாடுகளின் ஊடாக பெறப்பட்ட கடன்கள் ரூ. 76,480 இலட்சத்தை அடைந்தன. இக்கடன்பாடுகள் மீதான வட்டி வீதங்கள் பொதுவாக கடன் பெறப்படும் வேளையில் நிலவிய திறைசேரி உண்டியல்களுக்கான விளைவு வீதங்களுக்கு சமமானதாக காணப்பட்டன.

1996 எழுந்த பாரிய மூலவள இடைவெளியானது வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறையை நிதியிடுவதற்காக வங்கித்தொழில் முறையில் இருந்து அரசு கடன்பெறுவதனை கட்டாயப்படுத்தியது. நிதித்துறையில் இருந்தான மொத்தக் கடன்பாடுகள் 1995 இன் ரூ. 70,650 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 123,440 இலட்சத்தை அடைந்து காணப்பட்டமை இக்கடன்பாடுகளின் நாணய மேலாண்மையில் இருந்து பெறப்பட்ட கடன்கள் ரூ. 98,730 இலட்சமாக விளங்கிய வேளையில் வர்த்தக வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் ரூ. 24,710 இலட்சமாக அமைந்து காணப்பட்டன. தற்காலிக முற்பணங்கள் ( ரூ. 39,950 இலட்சம் ) அரச வைப்புக்களின் தேறிய நிலமையும் சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்களும் ( ரூ. 13,030 இலட்சம்) மற்றும் மத்திய வங்கியின் அதிகரித்த திறைசேரி உண்டியல் உடைமைகள் (ரூ. 45,750 இலட்சம் ) என்பனவற்றின் ஊடாக மத்திய வங்கியிடமிருந்து அதிகரித்தளவில் கடன் பெற்றமையானது உயர்வலு பணத்தின் விரிவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்து 1996 இல் ரூ. 98,730 இலட்சம் வரை கொண்ட மொத்த தேறிய கடன் ஒன்றை விளைவித்தது.

ரூ. 193,930 இலட்சம் கொண்ட நீண்ட கால முறிகளின் வழங்கல் நீங்கலான வர்த்தக வங்கியிடமிருந்தான அரசுக்கான தேறிய கொடுகடன் 1996 இல் ரூ. 24,720 இலட்சத்தினால் அதிகரித்தது. இது வர்த்தக வங்கிகளிடமிருந்தான அரசுக்கான கடன்பாடுகள் ரூ. 58,900 இலட்சத்தினால் அதிகரித்தமை மற்றும் அரச வைப்பு நிலுவைகளில் ஏற்பட்ட ரூ. 34,180 இலட்சம் கொண்ட அதிகரிப்பு என்பனவற்றின் தேறிய விளைவால் ஏற்பட்டதாகும். இவ்வாறாக வங்கித் தொழில் துறையிலிருந்தான அரசுக்கான மொத்த தேறிய கடன்பாடுகள் 1996 இல் ரூ. 123,440 இலட் சத்தை அடைந்தன. 1996 இறுதியில் வங்கித்தொழில் முறையிலிருந்தான அரசுக்கான வட்டிக் கடப்பாடுகளை உடைய மொத்தக் கடன்பாடுகள் ரூ. 397,070 இலட்சமாக அமைந்து காணப்பட்டது எனினும் அரசு வங்கித் தொழில் முறையுடன் ரூ. 164,130 இலட்சம் கொண்ட வைப்பு நிலுவைகளையும் கொண்டிருந்ததுடன் இவற்றுள் ரூ. 143,790 இலட்சம் வட்டி உழைக்காத நடைமுறைக்கணக்குகளில் வைத்திருக்கப்பட்டது. இது அரச வரவு செலவுத் திட்ட தொழிற்பாடுகள் மீதான அதி உயர் வட்டி பளுவினை குறைக்கும் நோக்கில் அரசின் காசு முகாமையை மேம்படுத்துவதற்கான அவசரத் தேவையை வலியுறுத்தி நிற்கின்றது.

## 8.8 அரச படுகடன்

1996 இன் இறுதியில் வெளிநின்ற அரச படுகடன் ரூ. 7,088,590 இலட்சமாக விளங்கி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 92 சதவீதமாகக் காணப்பட்டது. இது அரச உத்தரவாதத்தின் கீழ் வழங்கப்பட்டு திருப்பிச் செலுத்தப்படாதிருக்கும் கடன்களின் தீர்ப்பனவுக்காக இரு அரச வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பனவற்றிற்கு 1996 இல் வழங்கப்பட்ட ரூ. 238,730 இலட்சம் கொண்ட 10 ஆண்டு முறிகள் மற்றும் 1993 இல் இரு அரச வங்கிகளுக்கும் வழங்கப்பட்ட ரூ. 240,880 இலட்சம் கொண்ட 30 ஆண்டு முறிகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது. இவ்வாண்டில் வழங்கப்பட்ட முறிகள் நீங்கலான அரசின் மொத்த படுகடன் 1995 இன் 15 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1996 இல் 8 சதவீதத்தினால் அதிகரித்தது. உள்நாட்டு படுகடன் ரூ. 3,490,070 இலட்சமாக விளங்கி மொத்தப்

**வரைபடம் 8.5**
**படுகடன் உள்ளமைப்பு**




படுகடனில் 49 சதவீதத்திற்கு வகை கூறிய வேளையில் எஞ்சிய 51 சதவீதத்திற்கு வெளி நாட்டு படுகடன் பேரிலான ரூ. 3,598,520 இலட்சம் வகைகூறியது.

## உள்நாட்டுப் படுகடன்

நீண்ட கால முறிகள் நீங்கலான உள்நாட்டுப் படுகடன் முன்னைய ஆண்டின் 15 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1996 இல் 14 சதவீத அதிகரிப்பு ஒன்றினை பதிவு செய்து ரூபா 3,251,340 இலட்சமாக விளங்கியது. 1995 இன் இறுதியில் 45 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1996 இறுதியில் மொத்த உள்நாட்டு படுகடனில் 41 சதவீதத்திற்கு வகை கூறிய குறுங்கால படுகடன் (ஓராண்டு அல்லது அதற்குக் குறைவான முதிர்ச்சி) ரூ. 1,426,890 இலட்சத்தில் காணப்பட்டது. திறைசேரி உண்டியல்களின் வழங்கல் மீதான வரையறையின் காரணமாக குறுங்கால கடன் கருவிகளினூடாக பெறப்பட்ட தாழ்வடைந்த மட்டத்திலான கடன்பாடு களை பிரதிபலித்து முன்னைய ஆண்டின் 17 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் குறுங்கால கடன்பாடுகள் 12 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தன. திறைசேரி உண்டியல்களின் வெளி நின்ற மட்டத்தினை ஒப்புதல் அளிக்கப்பட்ட வரையறையான ரூ. 125 பில்லியனிலிருந்து மேல் நோக்கி திருத்தப்படாமை மற்றும் திறைசேரி உண்டியல்கள் ஊடாக கடன்பாடுகள் இந்த வரையறையினை 1996 ஒத்தோபரில் அடைந்தமை என்பன காரணமாக புதிய திறைசேரி உண்டியல் களின் வழங்கல் ஊடான மொத்தக் கடன்பாடுகள் 1995 இன் ரூ. 148,750 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1996 இல் ரூ. 112,250 இலட்சத்துக்கு மட்டுப் படுத்தப்பட்டது. திறைசேரி உண்டியல்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு ரூ. 1,249,960 இலட்சமாக விளங்கி மொத்தக் குறுங்கால படுகடனில் 88 சதவீதத்திற்கு வகைகூறியது. அதே வேளை குறுங்கால படுகடனின் எஞ்சிய 12 சதவீதத்திற்கு வகை கூறிய மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு 29 சதவீதத்தினால் அதிகரித்து 1996 இறுதியில் ரூ. 176,930 இலட்சத்தை அடைந்தது.

**அட்டவணை 8.8**
**வெளிநின்ற மத்திய அரச படுகடன் (அ)**

ரூபா பத்து இலட்சம்

| | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| மொத்தஉள்நாட்டுப் படுகடன் (ஆ) | 170,020 | 213,685 | 249,118 | 285,759 | 349,007 |
| குறுகிய கால | 97,924 | 101,845 | 108,725 | 127,471 | 142,689 |
| நடுத்தரகால மற்றும் நீண்டகால | 72,096 | 111,840 | 140,393 | 158,289 | 206,318 |
| கடன் உபகரணங்களின்படி | 170,020 | 213,685 | 249,118 | 285,759 | 349,007 |
| ரூபா பிணைகள் | 69,180 | 105,707 | 137,554 | 157,928 | 205,975 |
| திறைசேரி உண்டியல்களா | 87,096 | 97,196 | 98,896 | 113,771 | 124,996 |
| ஏனையவை | 13,744 | 10,782 | 12,669 | 14,060 | 18,036 |
| நிறுவனங்களின்படி | 170,020 | 213,684 | 249,119 | 285,759 | 349,007 |
| வங்கிகள் | 58,11! | 90,134 | 100,043 | 113,356 | 156,695 |
| மத்தியவங்கி | 34,932 | 16,480 | 21,345 | 28,684 | 37,673 |
| வர்த்தக வங்கிகள் | 23,179 | 73,654 | 78,698 | 84,671 | 119,022 |
| கடன்கரைப்பு நிதியம் | 359 | 239 | 137 | 100 | 100 |
| வங்கியல்லாத்துறை | 111,550 | 123,311 | 148,939 | 172,304 | 192,212 |
| தேசியசேமிப்பு வங்கி | 30,782 | 37,767 | 46,407 | 48,406 | 50,652 |
| ஊழியர்சேம நிதியம் | 54,563 | 65,645 | 79,745 | 95,000 | 110,431 |
| ஏனையவை | 26,205 | 19,899 | 22,786 | 28,898 | 31,129 |
| மொத்த வெளிநாட்டுப் படுகடன் | 235,539 | 270,224 | 301,812 | 346,286 | 359,852 |
| செயற்றிட்டக்கடன்கள் | 185,003 | 216,355 | 246,075 | 286,848 | 302,470 |
| செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 50,536 | 53,689 | 55,737 | 59,438 | 57,382 |
| நிறுவனங்களின்படி | 235,539 | 270,224 | 301,812 | 346,286 | 359,852 |
| சலுகைக் கடன்கள் | 225,132 | 260,557 | 292,463 | 335,656 | 348,898 |
| வர்த்தகக் கடன்கள் | 10,407 | 9,667 | 9,350 | 10,630 | 10,954 |
| வெளிநாட்டுவழங்குனர் கொடுகடன் | 1,094 | 1,065 | 950 | 1,020 | 923 |
| மொத்தவெளிநின்ற அரசபடுகடன் | 405,199 | 483,909 | 550,930 | 632,045 | 708,859 |
| மொத்த வெளிநின்ந அரச படுகடன்கடன் கரைப்பு நிதியத்திலிருந்து தேறியது | 405,199 | 483,583 | 550,793 | 631,945 | 708,759 |

அ. ஆண்டிறுதியின் பெறுமதி

ஆ. முறையே 1993இலும் 1996இலும் வழங்கப்பட்ட ரூபா 240,880 இலட்சம் மற்றும் ரூபா 238,730 இலட்சம் கொண்ட நீண்டகால முறிகளை உள்ளடக்கியது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

1993 இல் வழங்கப்பட்ட ரூ. 240,880 இலட்சம் மற்றும் 1996 இல் வழங்கப்பட்ட ரூ. 238,730 இலட்சம் கொண்ட தொகைகளிலான நீண்டகால மீள் அமைப்பு முறிகளையும் உள்ளடக்கிய நடுத்தர நீண்ட கால படுகடனின் வெளிநின்ற பொறுப்பு 1996 இறுதியில் ரூ. 2,063,180 இலட்சமாகக் காணப்பட்டதுடன் மொத்த உள்நாட்டு படுகடனில் 59 சதவீதத்திற்கு வகைகூறியது. அரசின் நடுத்தர மற்றும் நீண்ட கால உள்நாட்டு படுகடன் இருப்பில் ரூபா பிணையங்கள் பெரும்பாலும் முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்தின.

ரூ. 479,610 இலட்சம் கொண்ட நீண்டகால மீள்அமைப்பு முறிகளின் இருவழங்கல்களையும் உள்ளடக்கி ரூபா பிணையங்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு 1996 இறுதியில் ரூ. 2,059,750 இலட்சமாக விளங்கியது. பற்றாக்குறையினை நிதியிவடுதற்காக வழங்கப்பட்ட ரூபா பிணையங்கள் ரூ. 467,160 இலட்சமாக காணப்பட்ட வேளையில் மொத்த மீள் கொடுப்பனவுகள் ரூ. 241,730 இலட்சம் கொண்ட (நீண்ட கால முறிகள் நீங்கலான) தேறிய அதிகரிப்பொன்றினை விளைவித்து ரூ. 225,430 இலட்சமாக விளங்கின. 1996 காலப்பகுதியில் சந்தைக்கு விடப்பட்ட ரூபாக் கடன்கள் ஆண்டொன்றிற்கு 13.5 சதவீதத்தில் இருந்து 15.0 சதவீதத்திற்கு இடைப்பட்ட வட்டி வீதங்களுடன் இரண்டு தொடக்கம் ஆறாண்டுகள் வரையிலான முதிர்ச்சிக்காலத்தையும் கொண்டிருந்தன. ஆண்டொன்றிற்கு 15 சதவீதத்திலான உயர்வட்டி வீதம் கொண்ட இரு ஆண்டு ரூபா பிணையங்களை வழங்குவதன் முக்கிய நோக்கமானது வசப்படுத்தப் படாத மூலங்களிலிருந்து நிதிகளை கவர்வதற்காக திறைசேரி உண்டியல்களுக்கு மாற்றீடான கவர்ச்சிகரமான படுகடன் கருவி ஒன்றை வழங்குவதே ஆகும். ஊழியர் சேமநிதியமும் தேசிய சேமிப்பு வங்கியும் ரூபாக் கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்கான இரு முக்கிய உதவுநர்களாக தொடர்ந்தும் விளங்கி 1996 இறுதியில் வெளிநின்ற மொத்த ரூபா பிணையங்களின் 75 சதவீதத்திற்கு வகை கூறியது. நீண்ட கால மீள் அமைப்பு முறிகளின் இரு வழங்கல்களின் காரணமாக மொத்த வெளிநின்ற ரூபா பிணையங்களின் 22 சதவீதத்திற்கு இரு அரச வங்கிகளும் வகைகூறிய வேளையில் நீண்ட கால முறிகள் நீங்கலான ரூபாப் பிணையங்கள் பெரும்பாலும் முழுமையாக வங்கி அல்லாத மூலங்களினால் வைத்திருக்கப்பட்டன.

ஆண்டு ஒன்றுக்கு 14 சதவீத வட்டி வீதத்தைக் கொண்ட 10 ஆண்டு முதிர்ச்சிக் காலத்துடனான ரூ. 238,730 இலட்சம் பெறுமதியான நீண்ட கால முறிகளை அரசு 1996 இல் இரு அரச வங்கிகளுக்கும் (ரூ. 100,563 இலட்சம் மக்கள் வங்கிக்கு ரூ. 93,363 இலட்சம் இலங்கை வங்கிக்கு ) தேசிய சேமிப்பு வங்கிக்கும் (ரூ. 44,799 இலட்சம்) வழங்கியது. பல தரப்பட்ட செயற்திட்டங்களுக்கும் அரச உத்தர வாதங்களின் கீழ் வழங்கப்பட்டு திருப்பிச் செலுத்தப் படாதிருக்கும் கடன்களை தீர்ப்பனவு செய்வதன் மூலமாக அவற்றின் பொறுப்புக்களை இந்த நிறுவ னங்கள் மீள் மூலதனமாக்குவதை இயலச் செய்வதே இந்த முறிகள் வழங்கலின் நோக்கமாகும்.

### வெளிநாட்டுப்படுகடன்

1996 இறுதியில் ரூ. 3,598,520 இலட்சமாக விளங்கிய வெளிநாட்டுப் படுகடன் பேரிலான மொத்த வெளிநின்ற பொறுப்பு முன்னைய ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட மட்டத்தினை விட 4 சதவீத அல்லது ரூ. 135,660 இலட்சம் கொண்ட அதிகரிப்பொன்றினை பதிவு செய்தது. வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பானது ரூ. 244,350 இலட்சம் கொண்ட மொத்த வெளிநாட்டுக்கடன்பாடுகள் ரூ. 89,390 இலட்சம் கொண்ட மீள் கொடுப்பனவு ஒன்று மற்றும் செலாவணி வீத தளம்பல்களினால் தோன்றிய ரூ. 19,290 இலட்சம் கொண்ட பொறுப்பில் ஏற்பட்ட குறைப்பு என்பனவற்றின் தேறிய விளைவாகும்.

சலுகைக் கடன்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு ரூ. 3,488,980 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினை விட ரூபா 132,420 இலட்சம் அல்லது 4 சதவீத அதிகரிப்பினை கொண்டிருந்தது. இவ்வதிகரிப்பானது ரூ. 233,700 இலட்சம் கொண்ட மொத்தப் பெறுகைகள், ரூ. 76,650 இலட்சம் கொண்ட மீள் கொடுப்பனவுகள் மற்றும் செலாவணி வீத அசைவுகளின் பேரிலான ரூ. 24,630 இலட்சம் கொண்ட பொறுப்பில் ஏற்பட்ட குறைப்பு என்பனவற்றின் விளைவாக

அட்டவணை **8.9**
வெளிநாட்டுக் கடன்கள் மீது செலாவணி வீத மாற்றத்தின் தாக்கம் (அ)

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 (ஆ) |
|---|---|---|---|---|---|
| மொத்த பெறுகைகள் | 15,316 | 16,839 | 19,384 | 24,359 | 24,434 |
| மீள்கொடுப்பனவுகள் | 7,955 | 6,984 | 7,606 | 8,477 | 8,939 |
| தேறிய பெறுகைகள் | 7,361 | 9,855 | 11,778 | 15,882 | 15,495 |
| செலாவணி வீத மாறுபாடு காரணமாக பொறுப்பில் ஏற்பட்ட மாற்றம் | 13,599 | 24,831 | 19,810 | 28,592 | -1,929 |
| காலப்பகுதியின் இறுதியில் பொறுப்பு | 235,538 | 270,224 | 301,812 | 346,286 | 359,852 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அ. இந்த தரவு பெறுமதிதின பதிவுமுறையினை அடிப்படையாகக் கொண்டது.

ஆ. தற்காலிகம்

ஏற்பட்டதாகும். மொத்த வெளிநாட்டு படுகடனில் சலுகை ரீதியான படுகடனின் பங்கு முன்னைய ஆண்டினைப்போன்று 97 சதவீதத்தில் காணப் பட்டன. இருபுடை கடன்கள் ரூ. 1,884,980 இலட்சமாக விளங்கி மொத்த சலுகைக் கடன்களில் 54 சதவீதத்திற்கு வகை கூறிய வேளையில் பல்புடைக் கடன்கள் ரூ. 1,604,000 இலட்சமாக விளங்கி எஞ்சிய 46 சதவீதத்திற்கு வகை கூறின. வர்த்தக கடன்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு ரூ. 106,300 இலட்சத்தில் இருந்து 1996 இறுதியில் ரூ. 109,540 இலட்சத்துக்கு சிறிதளவால் அதிகரித்தது.

செயற்றிட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்ட கடன்களின் பேரிலான பொறுப்புக்கள் ரூ. 156,220 இலட்சம் கொண்ட அதிகரிப்பொன்றினைக்காட்டி 1996 இறுதியில் ரூ. 3,024,700 இலட்சமாகக் காணப்பட்டன. இது ரூ. 232,370 இலட்சம் கொண்ட மொத்தப் பெறுகைகள் ரூ. 59,860 இலட்சம் கொண்ட மீள் கொடுப்பனவுகள் மற்றும் செலாவணி வீத தளம்பல்களினால் தோன்றிய ரூ. 16,290 இலட்சத்தினால் பொறுப்பில் ஏற்பட்ட குறைப்பு என்பனவற்றின் தேறிய விளைவினால் ஏற்பட்ட தாகும். பண்டக்கடன்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு ரூ. 21,040 இலட்சம் கொண்ட தேறிய மீள் கொடுப்பனவுகள் மற்றும் செலாவணி வீத தளம்பல்களின் பேரிலான ரூ. 3,730 இலட்சத்தினால் மொத்தப் பொறுப்பில் ஏற்பட்ட குறைப்பு என்பனவற்றின் முக்கிய காரணத்தினால் 1995 இன் ரூ. 577,150 இலட்சத்தில் இருந்து ரூ. 24,770 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்து. 1996 இறுதியில் ரூ. 552,380 இலட்சமாக விளங்கியது. செயற்றிட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்டக் கடன்களில் ஏறத்தாள 98 சதவீதமானவை இருபுடை மற்றும் பல்புடை மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வேளையில் பண்டக்கடன்கள் முழுவதும் இருபுடை மூலங்களில் இருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டன.

## அரச படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

ரூ. 460,210 இலட்சம் வட்டிக் கொடுப்பனவு களையும் ரூ. 332,400 இலட்சம் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கி அரச படுகடன் பணிக்கொடுப்பனவுகள் ரூ. 792,610 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினை விட ரூ. 44,890 இலட்சம் கொண்ட அதிகரிப் பொன்றினை பதிவு செய்தன. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 1995 இன் 11.2 சதவீதத்தில் இருந்து 1996 இல் 10.3 சதவீதத்திற்கு குறைப்பொன்றினை பதிவு செய்தன. இது ரூ. 33,060 இலட்சத்தினால் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவில் ஏற்பட்ட குறைப்பு மற்றும் ரூ.77,950 இலட்சத்தினால் வட்டிக் கொடுப்பனவு களில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன வற்றின் தேறிய விளைவால் ஏற்பட்டதாகும்.

வெளிநாட்டுக்கடன்களின் பேரிலான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ. 20,140 இலட்சத்தினால் அதிகரித்ததற்கு மத்தியிலும் குறைந்த அளவான ரூபாப் பிணையங்கள் முதிர்ச்சியடைந்ததன் காரணமாக உள்நாட்டு கடன்களின் பேரிலான கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ. 53,200 இலட்சத்தினால் குறைவடைந்தமையானது ரூ. 33,060 இலட்சம் கொண்ட பொதுவான குறைப்பிற்கு பங்களிப்புச் செய்தது. உள்நாட்டு வெளிநாட்டு படுகடன் மீதான மொத்தப் படுகடன் மீள் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் 49 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1996 இல் மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் 42 சதவீதத்திற்கு வகை கூறின.

அட்டவணை **8.10**
அரசின் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 (அ) |
|---|---|---|---|---|---|
| படுகடன் பணிக்கொடுப் பனவுகள் | 52,018 | 57,493 | 60,702 | 74,772 | 79,261 |
| கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் | 26,078 | 27,290 | 22,671 | 36,546 | 33,240 |
| உள்நாட்டு | 18,123 | 20,327 | 15,065 | 28,069 | 22,749 |
| வெளிநாட்டு | 7,955 | 6,963 | 7,606 | 8,477 | 10,491 |
| வட்டிக் கொடுப்ப னவுகள் | 25,940 | 30,203 | 38,031 | 38,226 | 46,021 |
| உள்நாட்டு | 21,201 | 25,101 | 32,520 | 32,064 | 39,282 |
| குறுங்கால | 11,923 | 13,351 | 18,712 | 13,947 | 18,942 |
| நடுத்தரநீண்டகால | 9,278 | 11,750 | 13,808 | 18,117 | 20,340 |
| வெளிநாட்டு | 4,739 | 5,102 | 5,511 | 6,162 | 6,739 |
| வட்டி/நடைமுறைச் செலவு(%) | 28.94 | 29.53 | 29.93 | 25.80 | 26.97 |
| மொ.உ.உ (%)/ படு கடன் | 12.23 | 11.50 | 10.48 | 11.20 | 10.31 |

அ. தற்காலிகம் மூலம்: இலங்கை மத்திய வங்கி

1996 உள்நாட்டு படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 23 சதவீதத்தினால் அதிகரித்து ரூ. 392,820 இலட்சத்தினை அடைந்தன. இது வெளிநின்ற இருப்புக்களின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் 1995 இல் வழங்கப்பட்ட திறை சேரி உண்டியல்கள் மீதான உயர் வட்டிச் செலவு என்பனவற்றின் கூட்டு விளைவால் ஏற்பட்டதாகும். யப்பானிய யென்னுக்கு எதிரான ரூபாவின் பெறுமான வளர்ச்சி மற்றும் புதிய வெளிநாட்டுக் கடன்பாடுகளின் சலுகைத்தன்மை என்பனவற்றின் நன்மைகளை பிரதிபலிக்கும் வகையில் வெளிநாட்டு படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 1996 இல் ரூ. 5,770 இலட்சத்தினால் மட்டுமே அதிகரித்தன.

அரச வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள் மீதான தொடரும் வட்டிக் கொடுப்பனவுகளின் பளுவினை எடுத்துக்காட்டி பொருளாதார வகைப் படுத்தல் நியதிகளில் மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் நடைமுறைச் செலவின் 27 சதவீதத்திற்கும் அரசாங்க வருமானத்தின் 31 சதவீதத்திற்கும் வகைகூறின. மொத்த வருமானத்திற்கு மொத்த வட்டிக் கொடுப் பனவுகளின் விகிதங்கள் கடந்த இரு ஆண்டு களிலும் முறையே 26 சதவீதமாகவும் 28 சதவீதமாகவும் விளங்கின.

மாத வகையில் அமைந்த திறைசேரி உண்டியல்களின் உயர் அளவான வழங்கலுடன் இணைந்ததாக 1995 இல் நிலவிய திறைசேரி உண்டியல்களின் மீதான உயர் வட்டி வீதங்களையும் அதிகரித்த திறைசேரி உண்டியல் கள் அளவினையும் பிரதிபலிக்கும் வகையில் குறுங்கால படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 189,420 இலட்சமாக விளங்கி 1995 இல் ஏற்பட்ட 25 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 36 சதவீதத்தினால் அதிகரித்தன. நடுத்தர மற்றும் நீண்டகால படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 203,400 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டின் 31 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1996 இல் 12 சதவீதத்தினால் அதிகரித்தன. இறைப்பற்றாக் குறையினை நிதியிடுவதற்காக உயர்வட்டி வீதம் கொண்ட ரூபா பிணையங்களில் பெருமளவுக்கு சார்ந்திருந்ததானது அண்மைய ஆண்டுகளில் நடுத்தரமற்றும் நீண்ட கால படுகடன் மீதான உயர்வட்டிச் செலவிற்கு பங்களிப்புச் செய்தன. குறிப்பாக வசப்படுத்தப்படாத மூலங்களிலிருந்து மூலவளங்களை ஈர்த்துக்கொள்வதற்கு உயர்வட்டி வீதங்கள் அவசியமானதாகக் காணப்பட்டமை யினால் திறைசேரி உண்டியல் சந்தையில் நிலவிய உயர் வட்டி வீதங்கள் நடுத்தரம் மற்றும் நீண்ட கால ரூபாப் பிணையங்கள் மீதான வட்டிவீத கட்டமைப்பினை நேரடியாக மேல் நோக்கி உயர்த்தின.